# மக்கள் விசாரணை

லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

மலர்-09 இதழ்-06 நவம்பர் - 2020 மாத இதழ் விலை ₹ 10

ISSN : 2582-5275




## 10 செயற்கைக்கோள்களுடன் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது!

### PSLV-C49

makkalvisaranai



## வள்ளலார் அருளிய

# கல்ப மருந்து



### பத்தியமில்லா மருந்து

### குணமாகும் நோய்கள்







- புற்று நோய்கள்
- இருதய அடைப்புகள்
- உள் உறுப்புகளில்

ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்



- சிறுநீரக கற்கள்
- சிறுநீரகக் கோளாறுகள்
- கல்லடைப்பு
- சதையடைப்பு
- சிறுநீர் பிரச்சனை
- இரத்த ஓட்டம் சீராகும்
- சளி ▪ இருமல் ▪ கப ரோகங்கள்
- கபம் ▪ காசம் ▪ சைனஸ்
- கண்பார்வை கோளாறுகள்
- வாதம் ▪ பித்தம்



போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்

நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்



சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்

அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்

எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89

செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

"அன்பாய் அனைவரும் ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும் வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும் பெற்றிடுவோம்"

## சினிமாவிற்கு வந்த சோதனை!

15 வருடங்களுக்கு முன்புவரை தியேட்டர்களில் படம் ஒளிபரப்ப, நெகட்டிவ் ரீல் பயன்படுத்தப்பட்டது. எல்லாத் தியேட்டர்களும் சொந்தப் புரஜெக்டர் மெசின்கள் வைத்திருந்தனர். படம் ஓடும்போது அவ்வப்போது சரியான ஒளி கிடைக்க, கார்பன் தண்டுகளைச் சுழற்றி சரியான இடத்திற்குத் தள்ள வேண்டும். அலட்சியமாக இருந்தாலோ அல்லது தூங்கி விழுந்தாலோ 'வெயில்' படத்தில் காண்பித்த நிகழ்வு நடந்துவிடும். முக்கியமாக தியேட்டர் சீட்டுகள் பலிகடா ஆகிவிடும். டெக்னாலஜி வளரும்போது எல்லாத் துறையையும் போல சினிமாத் துறையும் மாற்றங்களைச் சந்திக்க ஆரம்பித்து. ரீலுக்குப் பதில் டிஜிட்டல் கண்டெண்ட்! உண்மையில் இது ஒரு வரம். ஆனால், அதுவே சாபம் என்று இப்போது சண்டை நடக்கிறது.

ரீல் சமயத்தில் ஒரு பிரிண்ட் எடுக்கக் குறைந்தது ரூ.60,000 ஆனது. இப்போது ஈ..சினிமா, டி..சினிமா என்று ஆவரேஜாக ரூ. 12,000 ஆகிறது, ஜி.எஸ்.டி.யுடன்! இது லாபம்தானே? என்பது தியேட்டர்காரர்களின் கேள்வி. அவர்களோடு சேர்ந்து சர்வீஸ் கொடுக்கும் 'க்யூப், யூ.எஃப்.ஓ'க்களின் கேள்வியும்கூட! இவர்களின் கேள்வியில் கண்டிப்பாக உண்மை இருக்கிறது. மறுப்பதற்கில்லை. ஆனால், தயாரிப்பாளர்களின் பார்வை வேறு மாதிரி இருக்கிறது.

ரீல் சமயத்தில் சிறிய படங்களுக்கு அதிகபட்சம் 15 பிரிண்ட்களும், மீடியம் பட்ஜெட் படங்களுக்கு 25 பிரிண்ட்களும், பெரிய படங்களுக்கு 40 பிரிண்ட்களும் போடப்பட்டன. வேறு விதத்தில் சொன்னால் சிறிய படங்களுக்குப் பிரிண்ட் செலவு ரூ. 9 லட்சம், மீடியம் படங்களுக்கு ரூ.15 லட்சம், பெரிய படங்களுக்கு ரூ.25 லட்சம் செலவானது.

அன்றைய காலகட்டத்தில் ஒரு பிரிண்ட் பல தியேட்டர்களுக்கு அடுத்தடுத்துக் கொண்டு செல்லப்பட்டன. ஐந்து வருடங்கள் கழித்துப் பழைய சாமான் கடையில் போட்டாலும் சில ஆயிரங்கள் கிடைத்தன. அதாவது 40 பிரிண்ட் என்பது 500 1000 தியேட்டர்களைச் சந்தித்தன. ஒரு பிரிண்ட் 10 லிருந்து 20 தியேட்டர்களில் படம் ஓட்டப் பயன்பட்டன. ஆவரேஜாக ஒரு தியேட்டருக்கான செலவு என்பது வெறும் 3000, 5000 மட்டுமே ஆனது.

தயாரிப்பாளர்களோ 'மெசினோடு இருந்தால்தான் அது தியேட்டர். இல்லையெனில் அது வெறும் ஹால். மேலும், தியேட்டர் என்று லைசென்ஸ் வாங்க மெசினும் இருக்க வேண்டும். யாரோ ஒருத்தருடைய மெசினைக் காட்டி தியேட்டர் லைசென்ஸ் வாங்கியிருப்பது சட்டப்படியும் செல்லாது' என்பது தயாரிப்பாளர்களின் கோணம். பத்து வருடங்களாக கண்டு கொள்ளப்படாமலிருந்த கோணம் இப்போது 'கோணல்' ஆகியிருக்கிறது. காரணம் தயாரிப்பாளர்கள் சந்தித்துக் கொண்டிருக்கும் தொடர் நஷ்டம். அதேவேளை தியேட்டர்காரர்கள் பெறும் தொடர் லாபம்.

யார் விட்டுக் கொடுப்பது என்பதில் இடியாப்பச் சிக்கல் தெரிகிறது. வெறும் ப்ராசஸிங் சார்ஜ் மற்றும் படத்தைத் தியேட்டருக்கு அனுப்பி லைசென்ஸ் கொடுக்கும் சார்ஜ் என்று ரூ. 3000 4000 மட்டும்தான் இனி கியூப் போன்ற நிறுவனங்களுக்கு என்ற முடிவு எட்டப்பட்டால் அந்த நிறுவனங்கள் என்ன ஆகும்? என்ன வேண்டுமானாலும் ஆகட்டும். அப்படி ஆனால் தயாரிப்பாளர்கள் ஓரளவு பிழைத்துக் கொள்வார்கள்.

தியேட்டர் ஓனர்கள்? தங்கள் பாலிசியை சற்று மாற்றி, தொடர்ந்து லாபம் பார்ப்பார்கள். காரணம் தியேட்டர் ஓனர்கள் புத்திசாலிகள். சிறந்த வியாபாரிகள். விரைவில் பேச்சு வார்த்தையில் முடிவு எட்டப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

– ஆசிரியர்

# நெல் கொள்முதல் கடந்த ஆண்டைவிட



நடப்பு காரீப் சந்தைக் காலத்தில் 202021, காரீப் பயிர்களை, விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு அரசு தொடர்ந்து கொள்முதல் செய்து வருகிறது.

பஞ்சாப், அரியானா, உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு, உத்தரகாண்ட், சண்டிகர், ஜம்மு காஷ்மீர், குஜராத் மற்றும் கேரளாவில் நெல் கொள்முதலில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கு கடந்த 24ம் தேதி வரை 144.59 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டில் இதே காலத்தில் 117.55 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. கடந்தாண்டைவிட இந்தாண்டு நெல் கொள்முதல் 23% அதிகம். இந்தாண்டு மொத்த கொள்முதலில், பஞ்சாப் மாநிலத்தில் மட்டும் 144.59 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு காரீப் சந்தை காலத்தில் 12.41 லட்சம் விவசாயிகள் ஏற்கனவே பயனடைந்துள்ளனர். இவர்கள் குறைந்த பட்ச ஆதரவு விலையாக, ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.18,880 வீதம் ரூ.27298.77 கோடி பெற்றுள்ளனர்.

மேலும், மாநிலங்கள் வேண்டுகோள்படி, தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா, தெலங்கானா, குஜராத், ஹரியானா, உத்தரப் பிரதேசம், ஒடிசா மற்றும் ராஜஸ்தான், மற்றும் ஆந்திர பிரதேசத்திலிருந்து 45.10 லட்சம் மெட்ரிக் டன் பருப்பு மற்றும் எண்ணெய் வித்துக்கள் ஆதரவு விலையில் கொள்முதல் செய்யவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆந்திர பிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் இருந்து 1.23 லட்சம் மெட்ரிக் டன் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சந்தை விலை, குறைந்தபட்ச ஆதரவு விலையை விட குறைந்தால், மற்ற மாநிலங்களில் பருப்பு

# 23% க்கும் மேல் அதிகம்



மற்றும் எண்ணெய் வித்துக்கள் கொள்முதல் செய்ய, வேண்டுகோள் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு, மகாராஷ்டிரா, ஹரியானா ஆகிய மாநிலங்களில் இருந்து, 24.10.2020 வரை 894.54 மெட்ரிக் டன் பாசி பயறு மற்றும் உளுந்து ஆகியவற்றை 871 விவசாயிகளிடமிருந்து ரூ.6.43 கோடி குறைந்தபட்ச ஆதரவு விலையில், அரசு நிறுவனங்கள் கொள்முதல் செய்துள்ளன. இதேபோல், கர்நாடகா மற்றும் தமிழக விவசாயிகளிடமிருந்து 5089 மெட்ரிக் டன் கொப்பரை தேங்காயை ரூ.52.40 கோடி குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் குறைந்த பட்ச ஆதரவு விலையில் பருத்தி கொள்முதல் சுமூகமாக நடந்து கொண்டிருக்கிறது. 24.10.2020 வரை, 68,419 விவசாயிகளிடமிருந்து, 353252 பருத்தி பேல்கள், ரூ.104790.17 லட்சத்துக்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

- குருதேவ்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு

மலர்-09 இதழ்-06 நவம்பர் - 2020

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ் சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).

ஆசிரியர் குழு
V. அருணாச்சலம், S. அனந்த கிருஷ்ணன், M.A.,
A. முருகையன்,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்: **வீ.சிவசங்கர்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
S.சுப்ரமணியன், V.தாயுமானவன்
ரூபன் பிரசாந்த்

**முதன்மை செய்தியாளர்கள்**
A.N.சேதுராமன் சென்னை, M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
S.செந்தில்குமார், R.ஜெயா சென்னை, S.மோகன் வேலூர்
A.D.ராஜேந்திரன் விழுப்புரம், அ.மு.ரமணாத்திரி,
E.தாமோதரன் தி.மலை, A.பாலகிருஷ்ணன் கோவை

**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின்
B.நாராயணசாமி, C. அன்பழகன், G.பாலாஜி
G.ராஜேஷ்கண்ணா, R. சத்தியமூர்த்தி
M.முருகன், A.சரவணன், குருபாலகிருஷ்ணன்,
R.குமார், M.சின்னதுரை

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**


இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# பாதுகாப்பான மொபைல் இணைய செயலி, கட்டமைப்பு நிர்வாக மென்பொருளை இந்திய ராணுவம் தொடங்கியது



இந்திய ராணுவத்தின் சார்பில் கட்டமைப்பு நிர்வாக மென்பொருள் மற்றும் மொபைல் இணைய செயலி புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

நாடு சுதந்திரம் அடையும் முன்பு கட்டப் பட்ட பழைய குடியிருப்புகளுக்குப் பதில் புதிய குடியிருப்புகள் கட்டுதல் உள்ளிட்ட முக்கியமான பணிகள் ராணுவ நிலையங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த பணிகளில் பல்வேறு முகமைகள் ஈடுபட்டு வருகின்றன. மேலும் இது அதிக காலம் பிடிக்கும் செயலும் ஆகும். இப்போது கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் மேலாண்மை உள்ளிட்ட நிலத்தைக் கண்டறிதல், பணிகளை திட்டமிடுதல் மற்றும் கண்காணித்தல், சூழல் பாதுகாப்பு மற்றும் விடுதிக் கொள்கைகள் ஆகிய அனைத்துப் பணிகளும் பழைய நடைமுறைப்படி ஆட்கள் மூலம் மேற்கொள்ளப் படுகிறது. இதனால், நேரம் விரையம் ஆகிறது மற்றும் திறன் இல்லாமலும் இருக்கிறது.

எனவே அனைத்து பங்கெடுப்பாளர்களும் அதிகாரம் பெற்று மாற்றம் பெறவும் மற்றும் மேலும் திறனுடன், அதிகபட்ச பொறுப்புடைமை, வெளிப்படைத்தன்மையுடன் திகழ்வதற்கு தானியங்கி முறை முக்கியம் என உணரப்பட்டது. இதையடுத்து கட்டமைப்பு நிர்வாக முறை என்ற பெயரிலான மென்பொருளை இந்திய ராணுவம் அறிமுகம் செய்துள்ளது. 2020 அக்டோபர் 28ம் தேதி நடைபெற்ற ராணுவ கமாண்டர்கள் கருத்தரங்கின் இடையே ராணுவத் தலைமை தளபதியால் இந்த மென்பொருள் தொடங்கப்பட்டது.

இது தவிர, பாதுகாப்பான இணையப் பயன்பாடு என்ற பெயரிலான தகவல் பரிமாற்ற மொபைல் செயலியை ஆத்மநிர்பார் பாரத் இயக்கத்தின் கீழ் இந்திய ராணுவம் உருவாக்கி உள்ளது. இது, ஆண்ட்ராய்டு தளத்தில் இணையம் வாயிலாக வீடியோ அழைப்பு சேவைகள், குரல் மற்றும் தகவல் பரிமாற்ற சேவைகளை பாதுகாப்புடன் வழங்கும். இது, எண்ட் டூ எண்ட் குறியாக்க செய்தியிடல் நெறிமுறையை உபயோகித்து உருவாக்கப்பட்ட வணிக ரீதியிலான தகவல் பரிமாற்ற செயலிகளான வாட்ஸ் ஆப், டெலிகிராம், சம்வத் மற்றும் ஜிஐஎம்எஸ் ஆகியவற்றைப் போன்றதாகும். தேவைக்கு ஏற்ப மாற்றப்படக்கூடிய குறியீட்டு முறை, உள்ளூர் உள் சேவையகங்கள் ஆகிய பாதுகாப்பு அம்சங்களுடன் எஸ்ஏஐ செயலி திகழ்கிறது.

இந்தியன் கம்ப்யூட்டர் அவசரகால உதவி குழுவால் அமைக்கப்பட்டுள்ள ராணுவ சைபர் குழு மற்றும் தணிக்கையாளர்கள் (சிஇஆர்டி ஐஎன்) வாயிலாக இந்த செயலி சோதனை செய்யப்பட்டது. இந்த செயலியை அறிவு சார் சொத்துரிமையாக தாக்கல் செய்வதற்கான நடைமுறைகளும், என்ஐசி கட்டமைப்பில் வெளியிடுவதற்கும் ஐஓஎஸ் தளத்தில் இயங்குவதற்கும் ஆன பணிகள் நடைபெற்று வருகின்றன. நாடு முழுவதும் உள்ள ராணுவ சேவைகளுக்குள் தகவல் பரிமாற்ற செயலியாக இது உபயோகப்படுத்தப்பட உள்ளது.

இந்த செயலியின் செயல்பாடுகளை ஆய்வு செய்த மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இந்த செயலியை முன்னெடுத்த கர்னல் சாய் சங்கரை பாராட்டினார்.

**- கனகதுர்கா**

# வலிமையான இந்தியா மட்டுமல்ல, பசுமையான இந்தியாவும் நமக்குத் தேவை

## குடியரசு துணைத் தலைவர்





வளர்ச்சியும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பும் ஒன்றோடொன்று கைகோர்த்திருக்க வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு எம் வெங்கையா நாயுடு இன்று கூறினார். இந்திய தொழில் கூட்டமைப்பின் பசுமை கட்டிடங்கள் மாநாடு 2020ஐ மெய்நிகர் முறையில் துவக்கி வைத்து பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

அனைத்துப் புதிய கட்டிடங்களும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த வகையில் கட்டப்படுவதை கட்டாயமாக்குவதை பரிசீலிப்பதற்கான நேரம் வந்து விட்டதென அவர் கூறினார். வலிமையான இந்தியா மட்டுமல்ல, பசுமையான இந்தியாவும் நமக்குத் தேவை என்று அவர் வலியுறுத்தினார்.

வரி சலுகைகள் மற்றும் இதர நடவடிக்கைகளின் மூலம் பசுமைக் கட்டிடங்களை ஊக்குவிக்குமாறு அரசுகள், நிதி ஆணையங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளை அவர் கேட்டுக் கொண்டார்.

புதிய கட்டிடங்கள் மட்டுமல்ல, பழைய கட்டிடங்களும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் மின்சார சிக்கனமும், தண்ணீர் சேமிப்பும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் குடியரசு துணைத் தலைவர் கூறினார்.

பசுமைக் கட்டிடங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறிய திரு நாயுடு, பருவநிலை மாற்றம் என்பது உறுதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அதை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் தேவை என்றும் கூறினார்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட, சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தப் பொருட்களை கட்டிடங்களின் கட்டுமானத்தில் பயன்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தினார். பசுமையான, சுகாதாரமான, வளமான இந்தியாவை கட்டமைக்க அரசுகளுடன் கட்டுமானத் துறை இணைந்து பணிபுரிய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

- K. ரமேஷ்குமார்

# 96% வீரர்கள் இந்திய விளையாட்டு ஆணைய மையங்களில் ஒலிம்பிக் 2024க்கான பயிற்சியை மீண்டும் தொடங்கியுள்ளனர்

இந்திய விளையாட்டு ஆணையத்தின் தேசிய உயர்சிறப்பு மையங்களில் விளையாட்டு நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கியுள்ளதை அடுத்து, 96 சதவீத வீரர்கள் ஒலிம்பிக் 2024க்கான பயிற்சிக்காக இணைந்துள்ளனர்.

அவுரங்காபாத், போபால், பெங்களூரு, தில்லி, லக்னோ, ரோஹ்தக் மற்றும் சோனிபட்டில் உள்ள இந்திய விளையாட்டு ஆணையத்தின் தேசிய உயர்சிறப்பு மையங்களில் ஒலிம்பிக் 2024க்கான பயிற்சி மீண்டும் தொடங்கியுள்ளது.

டோக்கியோவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள ஏற்கனவே தகுதி பெற்றுள்ள விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மையங்களில் தற்போது மும்முரமாக பயிற்சிகளை எடுத்து வருகின்றனர்.

பயிற்சி முகாம்களில் இணையும் வீரர்கள் தங்களை கட்டாயமாக தனிமைப்படுத்திக் கொண்டு ஆர்டிபிசிஆர் பரிசோதனையை செய்து கொள்ள வேண்டும். கொவிட்19 தொடர்பான அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. சில வீரர்கள் தீபாவளிக்கு பிறகு முகாம்களில் இணைவார்கள்.

இதற்கிடையே, ஜெர்மனியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ள இந்திய பாட்மிண்டன் வீரர்களின் தங்குமிட மற்றும் உணவு செலவுகளை ஏற்பதாக இந்திய விளையாட்டு ஆணையம் அறிவித்துள்ளது.

அஜய் ஜெயராம் மற்றும் சுபாங்கர் டே ஆகிய வீரர்கள் அக்டோபர் 30 முதல் நவம்பர் 10 வரை ஜெர்மனியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அவர்களின் தங்குமிட மற்றும் உணவு செலவுகளுக்காக மனிதாபிமான அடிப்படையில் ரூ 1.46 லட்சத்துக்கு இந்திய விளையாட்டு ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட தொகையில் 90 சதவீதம் உடனடியாக வழங்கப்படும்.

– S. சரவணன்

# அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சிகளில் பெண்களுக்கு கூடுதல் வாய்ப்பு அளிக்கும் திட்டத்தை டாக்டர் ஹர்ஷ் வர்தன் தொடங்கி வைத்தார்

அறிவியல் தொழில் நுட்பத் துறையின் ஸ்தாபனமான அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் (செர்ப்), ஆராய்ச்சித் துறையில் பெண்களுக்கு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் வகையில் முற்றிலும் பெண் விஞ்ஞானிகளுக்கான செர்ப் பவர் என்னும் திட்டத்தை, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் புவி அறிவியல், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன் காணொலிக் காட்சி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், அறிவியல் தொழில்நுட்பத் துறையில் பெண் ஆராய்ச்சி யாளர்களுக்கு கூடுதல் அதிகாரமளித்தலின் அவசியத்தை எடுத்துக் கூறினார். ஆராய்ச்சி வடிவமைப்புத் துறையில் இருபாலினரையும் ஒருங்கிணைக்கும் முயற்சி உலகளவில் கணிசமான கவனத்தை ஈர்த்துள்ளதாக அவர் தெரிவித்தார். "ஆராய்ச்சித் துறையில் பெண் களின் பங்களிப்பை மேலும் ஊக்குவிப்பது அரசின் முக்கிய முன்னுரிமைகளுள் ஒன்று" என்று குறிப்பிட்டார்.

பெண் ஆராய்ச்சியாளர்களுக்கு ஃபெல்லோஷிப் மற்றும் மானியம் வழங்கும் இந்த செர்ப் பவர் திட்டம், தேசிய அளவில் அவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பதுடன் அரசின் இந்தத் திட்டத்தால் பெண் விஞ்ஞானிகளுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கப்படுவதுடன், தலைமைப் பொறுப்புகளில் பெண்களின் பங்களிப்பையும் உறுதி செய்யும்.

– P. மாரிமுத்து

# ஹிமாலயப் பகுதிகளில் பெருங்காயத்தைப் பயிரிட்டு சிஎஸ்ஐஆர் ஐஹெச்பிடி வரலாறு படைத்துள்ளது

அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி மன்ற (சிஎஸ்ஐஆர்) ஆய்வகத்தின் உதவியுடன் இமாலய உயிரித் தொழில்நுட்ப நிறுவனமான ஐஹெச்பிடி, இமாலயாவின் லாஹுல் சமவெளியில் உள்ள விவசாயிகளுடன் இணைந்து பெருங்காயத்தைப் பயிர் செய்யவிருக்கிறது. சிஎஸ்ஐஆர் ஐஹெச்பிடி, பெருங்காய விதைகளை வாங்கி அதற்கான வேளாண் தொழில்நுட்பத்தை உருவாக்கியது.

இந்தியாவின் முக்கிய வாசனைப் பயிர்களில் பெருங்காயமும் ஒன்று. ஆப்கானிஸ்தான், ஈரான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து ஆண்டு தோறும் சுமார் 1200 டன் பெருங்காயத்தை சுமார் 100 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் இந்தியா இறக்குமதி செய்கிறது. ஃபெருலா அசஃபோடிடா என்று அழைக்கப்படும் பெருங்காயத் தாவர வகை இந்தியாவில் போதிய அளவு கிடைக்காததே இந்த வகைப் பயிர்கள் நம் நாட்டில் பயிரிடப்படாததற்கு முக்கிய காரணம். இந்தியாவில் பெருங்காயத்தின் பயிரிடுதலைத் துவக்கும் வகையில் கடந்த 15ஆம் தேதி சிஎஸ்ஐஆர் ஐஹெச்பிடி இயக்குனர் டாக்டர் சஞ்சய்குமார், லாஹுல் சமவெளியில் உள்ள க்வாரிங் கிராமத்தில் முதல் விதையை பயிரிட்டார்.

இந்திய உணவு வகைகளில் பங்கு வகிக்கும் பெருங்காயத்தை நாட்டில் பயிரிடும் முயற்சியில் சிஎஸ்ஐஆர் ஐஹெச்பிடி தொடர்ந்து ஈடுபட்டு வந்தது. இதனடிப்படையில் ஈரானில் இருந்து 6 வகையான பெருங்காய விதைகள் இம்மாதம் புதுதில்லி வந்தடைந்தது. கடந்த 30 ஆண்டுகளில் பெருங்காய விதைகளை இந்தியாவில் அறிமுகப்படுத்துவது இதுவே முதல் முறையாகும். குளிர்ந்த மற்றும் வறண்ட நிலங்கள் இந்த வகையான விதைகளுக்கு உகந்ததாக இருப்பதால், இந்தியாவில் இமாலயப் பகுதி பெருங்காயத்தைப் பயிரிட ஏதுவாக இருக்கும்.








மேலும் இமாச்சலப் பிரதேச மாநில வேளாண் துறையுடன் இணைந்து சிஎஸ்ஐஆர் ஐஹெச்பிடி விஞ்ஞானிகள், லாகூர் சமவெளியில் உள்ள கிராமங்களில் வசிக்கும் விவசாயிகளுக்கு பெருங்காயத்தைப் பயிரிடுவது குறித்த பயிற்சி முகாம்களையும் ஏற்பாடு செய்திருந்தது.

- V. சிவசங்கர்




"**எ**ளிய வழியில் புதுமைக் கல்வி' என்ற திசையில் பயணிக்கிறது "கல்வி 40'. இந்தச் செயலி தமிழ்நாடு, புதுச்சேரியில் சுமார் 18000 பதிவு இறக்கம் செய்யப்பட்டுள்ளது. பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் செயலிகள் அதிகம் உள்ள இன்றைய சூழ்நிலையில், மனப்பாடக் கல்வி முறையை ஊக்குவிக்காமல், பாடத்திட்டத்தில் இருக்கும் விஷயங்களை காட்சி வழிப்படுத்துதல் மூலம் மாணவர்களிடம் கல்வி, அறிவு சென்றடையச் செய்யும் செயலியாக "கல்வி 40' செயலி அமைந்துள்ளது.

"கல்வி 40' செயலியை உருவாக்கி தமிழ் பேசும் சிறார்களிடையே பரப்பி வருபவர் கணினி பொறியாளர் பிரேம்குமார். செயலியின் சிறப்பு அம்சங்கள் குறித்து பிரேம்குமார் மனம் திறக்கிறார்:

"கிராமப்புற அரசுப் பள்ளி குழந்தைகளுக்கும், குழந்தைகளுக்குப் பாடங்களைக் கற்றுத் தரமுடியாத சூழலில் உள்ள பெற்றோர்களுக்காகவும், பள்ளி முடிந்த பிறகு, வீட்டில் இருந்தபடி பள்ளிப் பாடங்களை எளிமையான வழியில் புரிந்து கொள்ள வழிவகை செய்யும் விதத்தில் இந்தச் செயலியை கட்டமைப்பு செய்துள்ளோம். பாடங்களைக் கற்பதில் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு கற்பதில் ஆர்வத்தை வளர்க்கும் விதமாகவும், பாடங்களைப் புரிந்து படிக்கவும், அதிக மதிப்பெண்கள் பெறவும், அறிவை விரிவு செய்யவும் எங்கள் மொபைல் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

"கல்வி 40' மொபைல் செயலியின் இலக்கு, 3 முதல் 8ஆம் வகுப்பு அரசுப் பள்ளி மாணவர்களை சென்று அடைவதுதான். எங்களுடைய காணொலிகளை, பள்ளிப் பாடங்களுக்கு ஏற்ற, ஒன்று முதல் ஐந்து நிமிடங்கள் வரை ஓடும் அளவுக்கு தயாரித்துள்ளோம். ஐந்து நிமிடங்களுக்கு மேலான அளவுள்ள காணொலிகளைக் காணும் சிறார்களுக்கு சோர்வு ஏற்படும். சிறு சிறு விடியோக்கள் 2000 வரை இந்தச் செயலியில் உண்டு. எப்படி காணொலி மூலம் பாடங்களைப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதை மாணவர்களும், அவர்களது பெற்றோரும் "சுய மதிப்பீடு' செய்து கொள்ள "பயிற்சித் தேர்வு' முறையும், குறிப்பிட்ட நேரத்திற்குள் கேள்விகளுக்கு விடையளிக்க தேர்வும் உண்டு. செயலியைப் பயன்படுத்தும் சிறார்களை சிந்திக்க வைக்க, விடைகளை, சுவையான தகவல்களை சேகரிக்க வைக்கும் விதமாக கதைகள், விடுகதைகள், புதிர்கள் மூலமாக மாணவர்களை இயக்கும் காணொலிகளும் தனியாக உண்டு.

"கல்வி 40' செயலி முற்றிலும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. எந்த நிலையிலும் கட்டணம் கேட்பதில்லை. ஒருமுறை பெயரைப் பதிவு செய்தால் போதும். ஒரே அலைபேசியில் பல வகுப்பு மாணவர்கள் அவர்களுக்கு வசதியான நேரங்களில் காணொலிகளைக் காணலாம். செயலியின் காணொலிகளைச் சிறார்கள் காணும் போது காணொலியில் இடையே விளம்பரங்களோ, இதர காணொலிகளோ இந்தக் காணொலியில் குறுக்கிடாது. சிறார்களின் மனநல பாதுகாப்பை கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட செயலி இது. வலைதள இணைப்பு வேகம் குறைவாக இருக்கும் கிராமங்களில் கூட, "கல்வி 40' செயலியை எளிதாக பதிவு இறக்கம் செய்யலாம். காணொலிகளைக் காணலாம்.

காணொலிகள் எல்லாம் தமிழில் மட்டுமே இருக்கும். படங்கள், விளக்கங்களைக்

கொண்டிருக்கும். எங்களது செயலிகளை உருவாக்குவதில் அரசுப்பள்ளி ஆசிரியர்களும் உதவுகிறார்கள். தன்னார்வ தொண்டர்களும், வெளிநாட்டு பள்ளி மாணவர்களும் காணொலிகளை உருவாக்குகிறார்கள். அமெரிக்காவில் மட்டும் தமிழ் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 200 பள்ளி மாணவர்கள் நமது சிறார்களுக்கான காணொலிகள் தயாரித்து வழங்கியுள்ளார்கள். இதுபோன்ற மாணவர்கள் 150 பேர் பத்து நாடுகளில் உள்ளனர். வெளிநாட்டு உள்நாட்டு தன்னார்வலர்கள் தயாரிக்கும் காணொலிகளை எங்கள் குழு மேம்படுத்தும். இந்தப் பங்களிப்பிற்காக யாருக்கும் ஊதியமோ, சன்மானமோ வழங்குவதில்லை. எங்கள் காணொலிகளை ஆசிரியர்களும் பார்க்கிறார்கள். பாடங்களை இப்படியும் சொல்லிக் கொடுக்கலாம் என்று ஆசிரியர்களும் புரிந்து கொண்டு பாராட்டுகிறார்கள்.

“கரோனா தொற்றுநோயின் தாக்கம் உலகளவில் கல்வித்துறையை முடக்கிப் போட்டுள்ளது. பல மாதங்களாக பள்ளிகள் மூடப்பட்ட நிலையில், “விடியோ கான்ஃபரன்சிங்’ மூலம் ஆசிரியர்கள் மாணவர் களுடன் இணைவதால் “ஆன்லைன் மூலம் கற்றல்’ முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கில வழி, நடுத்தர தனியார் பள்ளிகள் ஆன்லைன் மூலம் பாடங்களை நடத்தும் போது, வசதிகள் இல்லாத அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கும் கல்விக்கும் உள்ள இடைவெளி அதிகமாகி உள்ளது. இந்த இடைவெளியைக் குறைக்க “கல்வி 40’ தமிழ் மொழி வழி பாடங்களை இலவசமாக வழங்கி அரசுப் பள்ளி மாணவர்களுக்குச் சம வாய்ப்பை வழங்குகிறது. சென்னையில் “பம்பல்பி டிரஸ்ட்’ என்ற லாப நோக்கம் இல்லாத அறக்கட்டளையைத் தொடங்கி தமிழக சிறார்களின் பயன்பாட்டிற்கு செயலியை வழங்கியுள்ளோம். “கல்வி 40’ செயலி பிளே ஸ்டோரில் இலவசமாக கிடைக்கிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், புதுச்சேரி கிராமப்புற பள்ளிகளில் சோதனையாக குறிப்பிட்ட அரசுப் பள்ளிகளில் எங்கள்




திட்டத்தை அரசு அனுமதியுடன் செயல்படுத்தினோம். சில பாடங்களில் தேர்வு வைத்தோம். பிறகு அதே பாடங்கள் தொடர்பான காணொலிகளை மாணவர் களுக்கு காட்டி அதன் பிறகு தேர்வு வைத்தோம். முதல் தேர்வில் கிடைத்த மதிப்பெண்களை விட இரண்டாவது தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தார்கள். திருப்தி அடைந்த புதுச்சேரி அரசு இதர அரசு பள்ளிகளுக்கும் எங்கள் திட்டத்தை விரிவுபடுத்தச் சொன்னது. கரோனா தாக்கத்தால் பள்ளிகள் மூடப்பட்டதால் எங்கள் திட்டத்தை அரசு பள்ளிகளுக்கு நேரடியாகக் கொண்டு செல்ல முடியவில்லை. தமிழக அரசையும் நாங்கள் அணுகியுள்ளோம். கரோனா தாக்கம் குறைந்து பள்ளிகள் திறக்க காத்திருக்கிறோம். அடுத்த 6 மாதங்களில் மேலும் 4000 கல்வி காணொலிகளைத் தயாரித்து ஒரு லட்சம் மாணவர்களிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்பதுதான் எங்கள் இலக்கு” என்கிறார் பிரேம் குமார்.

- அகிலாண்டேஸ்வரி




# பெண் பயணிகளின் பாதுகாப்புக்கு "எனது தோழி" நடவடிக்கையை தொடங்கியது இந்திய ரயில்வே

ரயிலில் பயணிக்கும் பெண் பயணிகளுக்கு, புறப்படும் ரயில் நிலையத்திலிருந்து, சென்றடையும் ரயில் நிலையம் வரை பாதுகாப்புக்கு அளிக்கும் நோக்கில், "எனது தோழி (மேரி சஹேலி)" நடவடிக்கையை இந்திய ரயில்வே தொடங்கியுள்ளது.

ரயிலில் பயணம் செய்யும் பெண் பயணிகளின் பாதுகாப்புக்காக "எனது தோழி' நடவடிக்கை தென் கிழக்கு ரயில்வேயில் கடந்த செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டது. இதற்கு பெண் பயணிகளிடம் வரவேற்பு கிடைத்ததால், இந்த நடவடிக்கை அனைத்து ரயில்வே மண்டலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரயில்வே பாதுகாப்பு படையின் முன்முயற்சியில் தொடங்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை மூலம், ரயில் பயணம் செய்யும் பெண் பயணிகள், குறிப்பாக தனியாக பயணம் செய்பவர்களிடம், ரயில்வே பாதுகாப்பு படை பெண் போலீசார் தொடர்பு கொண்டு பயணத்தின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துரைப்பர். பயணத்தின் போது ஏதாவது பிரச்னை ஏற்பட்டால், 182 என்ற போன் செய்து தகவல் தெரிவிக்கும்படியும் கூறுவர்.

ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் (ஆர்பிஎப்), பெண் பயணிகளின் இருக்கை எண், ரயில் பெட்டி எண் ஆகியவற்றை சேகரித்து, ரயில் நிற்கும் இடங்களில் பாதுகாப்பு பணியில் உள்ள ஆர்பிஎப் போலீசாருக்கு தெரிவிப்பர். அவர்கள், சம்பந்தப்பட்ட பெண் பயணிகளை கண்காணிப்பர். தேவைப்பட்டால், பெண் பயணிகளை தொடர்பு கொண்டு பேசுவர். ரயிலில் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் ரயில்வே பாதுகாப்பு படை போலீசார் / மாநில ரயில்வே போலீசாரும், தனியாக பயணம் செய்யும் பெண் பயணிகளுக்கான பாதுகாப்பை வழங்குவர்.

சேர வேண்டிய இடம் வந்ததும், பெண் பயணிகளிடம் பாதுகாப்பு பற்றி கருத்தக்களை ஆர்பிஎப் குழுவினர் சேகரிப்பர். இந்த கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். "எனது தோழி" நடவடிக்கையின் கீழ் உள்ள ரயில்களில் பயணம் செய்யும் பெண் பயணிகளிடமிருந்து வரும் அவசர அழைப்புகளை மூத்த அதிகாரிகளும் கண்காணிப்பர்.

- M. முருகம்மாள்

# நிலையான மற்றும் லாபகரமான வேளாண்மையை உருவாக்க வேண்டும்: குடியரசுத் துணைத் தலைவர்



இந்தியாவில் நிலையான மற்றும் லாபகரமான வேளாண்மையை உருவாக்க பன்மடங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குடியரசுத் துணைத்தலைவர் திரு எம் வெங்கையா நாயுடு வேண்டுகோள் விடுத்துள்ளார். நமது கண்ணோட்டத்தையும் வழிமுறைகளையும் மாற்றிக்கொண்டால் குறைந்த நிலப்பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ரங்கா அறக்கட்டளை சார்பாக நடைபெற்ற ஆச்சார்யா என் ஜி ரங்காவின் 120வது பிறந்த நாள் விழா கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்து பேசுகையில் குடியரசுத் துணைத் தலைவர் இவ்வாறு கூறினார்.

விவசாயிகளின் வருமான பாதுகாப்பை உறுதி செய்வதன் வாயிலாக விவசாயிகளின் நலன் குறித்த ஆச்சார்யா என் ஜி ரங்காவின் முக்கிய நோக்கத்தை அடைய முடியும் என்று அவர் தெரிவித்தார். ஆச்சார்யா என் ஜி ரங்கா, பாராளுமன்றத்தில் விவசாயிகளுக்காகத் தொடர்ந்து குரல் எழுப்பி வந்ததைக் குறிப்பிட்ட குடியரசுத் துணைத் தலைவர், நமது விவசாயிகளின் கடும் உழைப்பிற்கான பலன்கள் அவர்களைச் சென்றடைவதை உறுதி செய்வது அவசியம் என்று கூறினார்.

நமது பாரம்பரிய வழிமுறைகளையும் தற்போதைய நவீன தொழில்நுட்பங்களையும் இணைத்து செயல்பட வேண்டும் என்றும், உள்நாட்டு புதிய கண்டுபிடிப்புகளை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல் படுத்துவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். உலக அளவில் வேளாண் துறையில் மேற்கொள் ளப்பட்டு வரும் நவீன தொழில்நுட்பங்களை நாமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ஜப்பான் நாட்டில் வேளாண்துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருவதை சுட்டிக் காட்டிய குடியரசுத் துணைத்தலைவர், தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இது போன்ற முயற்சிகளில் இந்தியாவும் ஈடுபட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

கொவிட்19 பரவல் காலத்தில் சத்தான உணவு முறைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு இருக்கும் இந்தத் தருணத்தில், வளர்ந்து வரும் வேளாண் தொழில் அதிபர்கள் தங்கள் லாபத்தை அதிகரித்துக் கொள்ளவும், அதே நேரத்தில் விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ளவும் சிறந்த வாய்ப்பு தற்போது நிலவி வருவதாக திரு வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

கடந்த தசாப்தங்களில் நிகழ்ந்த பல்வேறு பருவநிலை மாற்றங்களால் விவசாயிகள் அதிகளவில் பாதிக்கப்பட்டதாக அவர் கூறினார். அதேசமயம் விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நலத்திட்டங் களைப் பட்டியலிட்டு, அவற்றை அவர் பாராட்டினார்.

தோட்டக்கலை, பட்டுப்புழு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பால் பண்ணை, கோழி வளர்ப்பு, உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட பல துறைகளில் ஈடுபட விவசாயிகளை ஊக்குவித்து அதன் மூலம் அவர்கள் தங்களது வருமானத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று அவர் யோசனை தெரிவித்தார்.

விவசாயிகள் பயனடையும் வகையிலான ஆராய்ச்சிகளில் வேளாண் பல்கலைக்கழகங்கள் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

- ராஜேந்திரன்

# ஜோ பைடன் கமலா ஹாரிஸ்

## வெற்றி! உலகில் அமைதியை கொண்டுவருமா?

ஜோ பைடன் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது பலவகையில் வரலாற்றுச் சிறப்புமிக்கது. 77 வயதில் அவர் அமெரிக்க அதிபராக பதவி ஏற்கிறார். இதன்மூலம் அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் மூத்த வயதில் அதிபர் பதவி ஏற்பவர் ஆகிறார் ஜோ பைடன். அமெரிக்காவின் துணை அதிபர் பதவியில் இதுவரை பெண்கள் யாரும் இருந்ததில்லை. அந்த வகையில் துணை அதிபராக கமலா ஹாரிஸ் பதவியேற்பதும் இதுவே முதல் முறை என்பதால், இதுவும் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகிறது.

ஆப்ரிக்க அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த மற்றும் ஆசிய வம்சாவளியை சேர்ந்த ஒருவர் துணை அதிபர் பதவிக்கு வருவதும் இதுவே முதல் முறை. ஜோ பைடனின் ஆதரவாளர்கள் இந்த வெற்றியை கொண்டாடி வருகிறார்கள். அமெரிக்காவின் பல்வேறு நகரங்களிலும் ஜோ பைடனின் ஆதரவாளர்கள் ஊர்வலங்கள் நடத்தி வருகிறார்கள். சமூக ஊடகங்களிலும் பலர் ஜோ பைடன் வெற்றி எப்படி அமெரிக்காவின் வருங்காலத்தையும் உலகின் வருங்காலத்தை மாற்றப் போகிறது என்றும் தங்களது கருத்துகளை பதிவிட்டு வருகிறார்கள்.

**தமிழகத்தைத் தாய்வழிப் பூர்விகமாகக் கொண்ட கமலா ஹாரிஸ், தற்போது அமெரிக்க துணை அதிபராக தேர்வாகி இருக்கிறார்**

கமலா ஹாரிஸ் அமெரிக்காவின் அதிபர் பதவிக்கான வேட்பாளரைத் தேர்வு செய்யும் ஜனநாயகக் கட்சியின் உள்கட்சிப் போட்டியில் களமிறங்கிய பிறகுதான், உலக அளவில் இவர் மீது அதிக ஊடக வெளிச்சம் பாயத் தொடங்கியது. அந்தப் போட்டியில் வெல்ல முடியவில்லை என்றாலும், இப்போது ஜோ பைடனின் அதிபர் தேர்தல் வெற்றி மூலம் அமெரிக்காவின் துணை அதிபர் ஆகிறார் கமலா. தான் வெற்றி பெற்றால் கமலா ஹாரிஸ் துணை அதிபர் ஆக்கப்படுவார் என்று பைடன் அறிவித்தபோது, கமலா மீது இவ்வளவு கவனம் விழக் காரணம் அமெரிக்க துணை அதிபர் பதவியில் இதுவரை ஒரு பெண்ணோ, ஆப்ரிக்கஅமெரிக்க வம்சாவளி யினரோ, ஆசியஅமெரிக்க வம்சாவளியினரோ



இருந்ததில்லை. அந்த வரலாற்றை மாற்றப் போகும் கமலா ஹாரிஸ் தனிப்பட்ட வாழ்க்கை குறித்த சில தகவல்களைப் பாப்போம்.

"குடும்பம்தான் எல்லாம்": "எனக்கும் குடும்பம்தான் எல்லாம். அமெரிக்கா, என் கணவர் டக்ளஸ் எம்ஹாஃப் மற்றும் எங்கள் அருமையான குழந்தைகள் கோல் மற்றும் எல்லா எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளும் வரை என்னால் காத்திருக்க முடியாது," என கடந்த 12 ஆகஸ்ட் அன்று, தன் ஆதரவாளர்கள் முன் வெளிப்படையாகச் சொன்னார். என் வேலை நிமித்தமாக எனக்கு பல பட்டங்கள் கிடைத்து இருக்கின்றன. அதில் அமெரிக்க துணை அதிபர் என்கிற பட்டம் பெருமிதமான ஒன்றுதான். ஆனால் மொமலா (Momala) என்கிற பட்டம் எனக்கு எப்போதும் நெருக்கமான ஒன்று என கமலா ஹாரிஸே சொல்லி இருக்கிறார்.

அம்மா ஷியாமளா: அமெரிக்க துணை அதிபராகத் தேர்வாகி இருக்கும் கமலா ஹாரிஸ், கடந்த 10 மே, 2020 அன்று, தன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில், தன் தாய் ஷியாமளாவின் படம் ஒன்றைப் பதிவு செய்து இருந்தார். அந்தப் பதிவில் "எல்லா விதமான தடைகளையும் உடைத்து எறிந்த ஒரு தாயின் மகள் நான். ஷியாமளா ஹாரிஸ் ஐந்து அடி உயரத்துக்கு மேல் இருக்கமாட்டார். ஆனால் எப்போதாவது அவரை சந்தித்து இருந்தால், அவர் ஏழு அடி உயரமானவர் என நீங்கள் நினைத்து இருப்பீர்கள். அவருக்கு அப்படி ஓர் உற்சாகமும், விடாமுயற்சியும் இருந்தது. அவர்



என்னை வளர்த்ததற்கு நான் தினமும் நன்றி சொல்கிறேன்" என அன்னையர் தின வாழ்த்து சொல்லி இருந்தார் கமலா ஹாரிஸ்.

1960ம் ஆண்டு உட்சுரப்பியியல் பிரிவில் முனைவர் பட்டம் பெறுவதற்கான கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்துக்கு வந்தார் ஷியாமளா. அங்குதான் டொனால்டு ஹாரிஸை சந்தித்தார். அதன் பிறகு திருமணமும் செய்து கொண்டார். 1971ம் ஆண்டில், கமலா ஹாரிஸ் க்கு ஏழு வயதாக இருக்கும் போது, டொனால்டு ஹாரிஸ் மற்றும் ஷியாமளா, விவாகரத்து பெற்றுக் கொண்டார்கள். விவாகரத்துக்குப் பிறகும், இவர்களது வாழ்கையில் டொனால்டு ஹாரிஸ் தொடர்ந்து இருந்தார். இருப்பினும், தங்களின் வாழ்கையை வடிவமைத்ததில், பெரும் பகுதி, தன் தாய் ஷியாமளாவைத்தான் சேரும் எனச் சொல்லி இருக்கிறார் கமலா ஹாரிஸ்.

காதல் கணவர் டக்ளஸ் எம்ஹாஃப்: கமலா ஹாரிஸின் கணவர் டக்ளஸ் எமோஃப், தெற்கு கலிஃபோர்னிய பல்கலைக்கழகத்தில், கோட் சட்டப் புலத்தில் சட்டம் பயின்றவர். 1990 களின் கடைசி காலம் வரை, பல்வேறு சட்ட நிறுவனங்களில் பணியாற்றினார். 2000ம் ஆண்டில் சொந்தமாக சட்ட நிறுவனத்தை தொடங்கினார். 2006ம் ஆண்டு, இந்த நிறுவனத்தை வெனபிள் என்கிற நிறுவனம் வாங்கி தம்முடன் இணைத்துக்கொண்டது.

ஹாலிவுட் வீடியோ என்கிற நிறுவனத்துக்கும், ஃபாக்ஸ் நிறுவனத்துக்கும் இடையிலான கணக்கு வழக்கு பிரச்சனையில், ஹாலிவுட் வீடியோ சார்பாக வாதாடினார். இதனால் பொழுதுபோக்கு தொடர்பான சட்ட விவகாரங்களில் இவருக்கென ஒரு பெயர் கிடைத்தது. இந்த வழக்குக்குப் பின், பல தயாரிப்பு நிறுவனங்கள் சார்பாக க்ளாஸ் ஆக்ஷன் எனப்படும் வழக்குகளில் ஆஜரானார் எம்ஹாஃப். 2017ம் ஆண்டு வெனபிள் நிறுவனத்தை விட்டு வெளியேறினார். டி.எல்.ஏ ஃபைபர் என்கிற நிறுவனத்தில் கூட்டாளியாக சேர்ந்து பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். பொழுதுபோக்கு சார்ந்த வழக்குகள் மற்றும் அறிவுசார் சொத்து விவகாரங்களில் நிபுணர்.

இந்து, யூத மத வழக்கம்: கமலா டக்ளஸ் திருமணம்: 2013ம் ஆண்டு, க்ரிசெட்டி ஹட்லின் என்பவர் ஏற்பாடு செய்த Blind Date-ல் தான் கமலா ஹாரிஸ் மற்றும் டக்ளஸ் எம்ஹாஃப் சந்தித்தார்கள் என்கிறது ஹாலிவுட் ரிப்போர்டர். ஒரு வருடம் கழித்து, ஒரு சிறிய நிகழ்ச்சியில், மனதுக்கு நெருக்கமான முறையில் இருவரும் திருமணம் செய்து கொண்டார்கள். திருமணத்தின் போது, இருவரும், தங்களின் கலாசாரங்களை மதிக்க முடிவு செய்து இருந்தார்கள். கமா ஹாரிஸின் இந்து கலாசாரத்தை ஏற்கும் விதத்தில் டாக் எம்ஹாஃப் பூமாலையை அணிந்து இருந்தார். டக்ளஸ் எம்ஹாஃப்ன் யூத கலாசாரத்தை மதிக்கும் விதத்தில், கமலா ஹாரிஸ் கண்ணாடியை உடைத்தார் என்கிறது எஸ் எஃப் கேட் செய்தி வலைதளம். என் மனைவியின் அரசியல் வேலைகள், என்னை மிகவும் கவர்கிறது. என் மனைவியின் தேர்தல் வேலைகளின் போது, என்னை நிறுத்தி, என்னோடு செல்ஃபி எடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள் என கடந்த ஆண்டு, ஹாலிவுட் ரிப்போர்டருக்குச் சொல்லி இருந்தார் டக்ளஸ் எம்ஹாஃப்.

மொமலா (Momala) நெருக்கமான பட்டம்: டாக் எம்ஹாஃப்க்கு, முதல் திருமணத்தின் வழியாக, இரண்டு குழந்தைகள். அந்த குழந்தைகள் பெயர் தான் கோல் மற்றும் எல்லா. இந்த குழந்தைகள், கமலா ஹாரிஸை அன்பாக மொமலா என்று அழைக்கிறார்களாம். இந்த பட்டம்தான் தனக்கு நெருக்கமான பட்டம் என கமலா ஹாரிஸே சொல்லி இருக்கிறார்.

கமலா ஹாரிஸ் எலே (Elle) என்கிற பத்திரிகையில் "கோல் மற்றும் எல்லா, என்னை இதை விட சிறப்பாக வரவேற்க முடியாது. அவர்கள் அறிவான, திறமையான, நகைச்சுவை உணர்வு மிக்க குழந்தைகள். தற்போது குறிப்பிடத் தகுந்த விதத்தில் பதின் பருவ இளைஞர்களாக வளர்ந்து இருக்கிறார்கள். நான் ஏற்கனவே டக்ளஸால் கவரப்பட்டுவிட்டேன். ஆனால், எல்லாவும் கோலும்தான் என்னை இந்த குடும்பத்துக்குள் இழுத்து வந்து இருக்கிறார்கள் என்று நம்புகிறேன்" என எழுதி இருக்கிறார். அம்மா ஷியாமளா, கணவர் டாக் எம்ஹாஃப், உலகு போற்றும் கமலாவை மொமலா என்று அழைக்கும் எல்லா மற்றும் கோல் என அமெரிக்க துணை அதிபராகவுள்ள கமலாவின் அன்பு வளையம் அத்தனை அழகாக இருக்கிறது.

- S. சுப்ரமணியன்

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் (Hâ‹ÞTH) திட்டத்தின் கீழ் கடன் வாங்கித் தருவதாகக் கூறி ஏமாற்றுபவர்களிடம் இருந்து பொது மக்களும், தொழில்முனைவு ஆசையில் இருப்போரும் எச்சரிக்கையாக இருக்கும் படி மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:


சில தனிநபர்கள் அல்லது முகமைகள் பிஎம்இஜிபி திட்டத்தின் கீழ் கடன் பெற்றுத்தருவதாகக் கூறி, அதற்கான கடன் அனுமதி கடிதத்தை போலியாகத் தயாரித்து அதைக் காட்டி பணம் பறிக்க பொதுமக்கள், தொழில் முனைவு ஆசையில் இருக்கும் இளைஞர்களை அணுகுவதாக அமைச்சகத்தின் கவனத்துக்கு வந்திருக்கிறது. இந்த திட்டத்தின் பெயரைப் பயன்படுத்தி நேர்மையற்ற வகையில் மக்களை ஏமாற்றுவபவர்களை அமைச்சகம் கடுமையாக எச்சரிக்கிறது. ஏமாற்றுவோர் மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கவும், விசாரணை மேற்கொள்ளவும் அமைச்சகத்தின் சார்பில் இது குறித்து ஏற்கனவே காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் என்பது மத்திய அரசின் கடனோடு இணைந்த மானிய திட்டமாகும். இது எம்எஸ்எம்இ அமைச்சகத்தால் கடந்த 200809ம் ஆண்டு முதல் நாடு முழுவதும் முதல்

## பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கத் திட்டத்தின் கீழ் கடன் வாங்கித் தருவதாக மோசடி:

## போலி நபர்களிடம் ஏமாற வேண்டாம்!






தலைமுறை தொழில் முனைவோர் குறுநிறுவனங்களை உருவாக்குவதற்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் பெறுதல், விண்ணப்பத்துக்கான ரசீது வழங்குவது முதல் கடன் அனுமதி, விண்ணப்பதாரர் கணக்கு வைத்துள்ள வங்கிகளுக்கு கடன் தொகையை செலுத்துதல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் காதி மற்றும் கிராம தொழிலகள் ஆணையத்தின் ஒரே ஒரு இணையதளத்தின் வாயிலாக மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது (https://www.kviconline.gov.in/pmeepeportal/pmeg-phome/index.jsp). இந்த ஒட்டுமொத்த செயல்பாடுகளுக்கும் எந்த வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

பிஎம்இஜிபி திட்டத்தை அனுமதிக்க, முன்னெடுக்க அல்லது எந்த ஒரு நிதி உதவியும் அளிக்க எந்த ஒரு தனிநபருக்கு /முகவருக்கு / இடைத்தரகருக்கு / கிளை நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

சில தனிநபர்கள் அல்லது முகமைகள் பிஎம்இஜிபி திட்டத்தின் கீழ் கடன் பெற்றுத்தருவதாகக் கூறி, அதற்கான கடன் அனுமதி கடிதத்தை போலியாகத் தயாரித்து அதைக் காட்டி பணம் பறிக்க பொதுமக்கள், தொழில்முனைவு ஆசையில் இருக்கும் இளைஞர்களை அணுகுவது முற்றிலும் சட்டவிரோதமாகும். போலியான நடவடிக்கையாகும். இது போன்ற நேர்மையற்ற செயல்களில் இருந்து பொதுமக்கள் தொடர்ந்து எச்சரிக்கையாக இருக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

- S. மோகன்

# சிந்தனை முத்துக்கள்

சில அறிஞர்களுடன் பழகினால் நீ அறிவாளி ஆகலாம். ஆனால் பல பணக்காரர்களுடன் பழகினாலும் பணக்காரன் ஆகமாட்டாய். அடிமைதான் ஆவாய்..



நன்றாக பேசி பழகுபவன் எல்லாம் நமக்கு நல்லதையே செய்வான் என்று நினைக்காதே. தேளின் கொடுக்கில் மட்டுமல்ல... சுவையான தேன் சேகரித்து கொடுக்கும் தேனியின் கொடுக்கிலும் விஷம்தான் இருக்கிறது..



ஒரு கல்லை எடுத்து நாயைப் பார்த்து வீசினால் அது பயந்து ஓடிவிடும். அதே கல்லால் ஒரு தேன் கூட்டை நோக்கி வீசினால் தேனீக்களுக்கு பயந்து நாம் ஓட வேண்டும். பலம் வாய்ந்த நாயை விட பலம் குன்றிய தேனீக்கள் நம்மை ஓட வைப்பதற்கு காரணம் தேனீக்கள் ஒற்றுமையாக நம்மை துரத்துவதால்தான்.. எந்த இனமாக இருந்தாலும் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே எதையும் சாதிக்க முடியும்..

எந்த வீட்டில், ஒரு பெண்ணை அடக்கி, ஒரு ஆண் ஜெயிக்கிறானோ, அங்கே ஓர் மிருகம் ஜெயிக்கிறது என்று பொருள். எங்கே ஒரு ஆணை அடக்கி பெண் ஜெயிக்கிறாளோ அங்கே, ஒரு 'அடங்காபிடாரி' ஜெயிக்கிறது என்று பொருள். கணவன் மனைவியிடமும், மனைவி கணவனிடமும் தோற்று போக தயாராக இருந்தால், அங்கே குடும்பம் ஜெயிக்கிறது என்று பொருள்.



* தங்க நாற்காலியின் முன்
* கை கட்டி நிற்பதை *

விட...



* உன் உழைப்பினால் ஆன தகர நாற்காலியில் கால் மேல் கால் போட்டு உட்கார ஆசைக் கொள் . . . !

தேவராட்டம்
வன்னியராட்டம்
நாடாராட்டம்
எல்லாம் இங்க
கொஞ்ச நாள் தான்
இனி வருங்காலத்தில்.

மார்வாடியாட்டம்
இந்திகாரனாட்டம்
பானிபூரியாட்டம்
தான்..



உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே.

– சுவாமி விவேகானந்தர்






பாய்சன் பத்து நாள் ஆனாலும் பாயாசம் ஆகாது ஆனால் பாயாசம் பத்து நாள் ஆனால் பாய்சன் ஆயிடும்

நாம் விதைக்கும் எண்ணங்கள் நம்மிடமே திரும்பி வந்து சேரும்...
நன்மை, தீமை, அறம், உண்மை, பொய், ஆக்கம், கேடு, அன்பு, சினம்...
எப்படிப்பட்ட எண்ணங்களை விதைக்க வேண்டும் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். எண்ணம் போல வாழ்க்கை...!




தயவு செய்து யாரும்
பைக்ல மாட்டி வச்சிருக்க
ஹெல்மட்ட திருடாதிங்க
நீங்க திருடுன நேரம்
அவங்களுக்கு ஏதாவது
ஆச்சுனா விலை மதிப்பு
இல்லாத உயிர்க்கு
பாதிப்பு ஆயிடும் இப்படி
கேவலமா அடுத்தவங்க
பொருளுக்கு
ஆசைப்பட்டு ஒரு
குடும்பத்த
அழவைய்காதீங்க
🌹🙏🙏🙏🌹









ஃபிரிஜ் என்பது
சற்றே காஸ்ட்லியான
குப்பைத் தொட்டி!












# 10 செயற்கைக்கோள்களுடன்... PSLV-C



ஸ்ரீஹரிகோட்டா: 10 செயற்கைகோள்களுடன் பிஎஸ்எல்வி C-49 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 1வது ஏவுதளத்தில் இருந்து 3.12 மணிக்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த ஆண்டின் முதல் ராக்கெட்டை இஸ்ரோ விண்ணில் செலுத்தியுள்ளது.

10 செயற்கைகோள்களுடன் விண்ணில் பாய்ந்தது (PSLV-C49) பி.எஸ்.எல்.வி. C-49 ரக ராக்கெட்டை இஸ்ரோ நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த ராக்கெட்டில் பூமி கண்காணிப்பு பணிக்காக இந்தியாவுக்கு சொந்தமான இ.ஓ.எஸ். 01 என்ற பூமி கண்காணிப்பு செயற்கைகோள் பொருத்தப்பட்டு உள்ளது.

இவற்றுடன் இந்த ராக்கெட்டில் வணிக ரீதியிலான 9 பன்னாட்டு செயற்கை கோள்களும் விண்ணுக்கு அனுப்பப்பட உள்ளது. இதில் லிதுவேனியா நாட்டைச் சேர்ந்த 1 தொழில்நுட்ப கண்டுப்பிடிப்பு செயற்கைகோள், லக்சம்பர்க் நாட்டைச் சேர்ந்த கிளியோஸ் ஸ்பேஸின் 4 கடல்சார் பயன்பாட்டு செயற்கைகோள்கள் மற்றும் அமெரிக்காவின் 4 லெமூர் செயற்கை கோள்களும் அடங்கும். இந்த 10 செயற்கை கோள்கள் அடங்கிய ராக்கெட் ஆந்திரா மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்ணில் ஆய்வு மையத்தில் உள்ள 1வது ஏவுதளத்தில் இருந்து இன்று ஏவப்பட்டது. இதற்காக இஸ்ரோ விஞ்ஞானிகள் நேற்று 4வது நிலைக்கான

# 49 வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது!




எரிபொருளை நிரப்பும் பணியை நிறைவு செய்தனர். தொடர்ந்து விஞ்ஞானிகள் ராக்கெட்டின் செயல்பாடுகளை கண்காணித்து வந்தனர். திட்டமிட்டபடி, 26 மணி நேர கவுண்ட்டவுனை முடித்துக் கொண்டு பிஎஸ்எல்வி சி.49 ரக ராக்கெட் சரியாக 3.12 மணிக்கு விண்ணில் பாய்ந்தது. முதலில் 03.02 மணிக்கு ஏவப்படும் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில் 10 நிமிடங்கள் தாமதமாக விண்ணில் செலுத்தப் பட்டது. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி, ரக ராக்கெட்டுகளை தயாரித்து அவற்றில் செயற்கோள்களை பொருத்தி திட்டமிட்ட இலக்குகளில் செயற்கைகோள்களை நிலை நிறுத்தி வருகிறது.

அந்தவகையில் பூமி கண்காணிப்பு, வானிலை தகவல்கள், பேரிடர்களை முன் கூட்டியே அறிந்து கொள்வது, வாகனங் களுக்கு வழிகாட்டுவது உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகளுக்காக நம் நாட்டுக்குச் சொந்தமான செயற்கோள்களை விண்ணில் நிலை நிறுத்தி வருகிறது. இவற்றுடன் வெளிநாடு களைச் சேர்ந்த செயற்கைகோள்களையும் திட்டமிட்ட இலக்குகளில் வெற்றிகரமாக நிலை நிறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கொரோனா பரவல் காரணமாக ராக்கெட் ஏவப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் 10 செயற்கைக் கோள்களுடன் இன்று பிஎஸ்எல்வி சி 49 ராக்கெட் இன்று விண்ணில் செலுத்தப்பட்டது.

- ஆசிரியர்

# ‘கடவுள் துகள்கள்’ என்றால் என்ன?

சுமார் 1400 கோடி ஆண்டுகளுக்கு முன் இந்தப் பேரண்டம் உருவாகக் காரணம் என்று பெரும்பான்மையான அறிவியலாளர்களால் நம்பப்படும் ‘பெரு வெடிப்பு’ (Big Bang) நிகழ்ந்தது.


அந்த வெடிப்பில் இருந்து சிதறிய கூறுகள், வெவ்வேறு திசைகளில் ஒளியின் வேகத்தைக் காட்டிலும் அதிகமான வேகத்தில் சிதறின. அவ்வாறு சிதறிய கூறுகளுக்கு நிறை கிடையாது.

நிறை இல்லாத அந்தக் கூறுகள் ஓர் ஆற்றல் புலத்தில் இணையும்போது அவை நிறை பெறுகின்றன என பீட்டர் ஹிக்ஸ் தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

(ஒரு பண்டத்தில் எந்த அளவுக்கு பொருள் திணிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும் நிறையானது ‘பொருண்மை’ அல்லது ‘திணிவு’ என்றும் வழங்கப்படுகிறது. அப்பண்டத்தின் நிறையுடன், அது இருக்கும் இடத்தில் உள்ள ஈர்ப்பு விசையைப் பெருக்கினால், அதன் எடை கிடைக்கும். எடுத்துக்காட்டாக புவியிலும், நிலவிலும் ஒரே பொருள் அல்லது நபரின் எடை வேறுபடக் காரணம், இரண்டின் ஈர்ப்பு விசையும் வெவ்வேறாக இருப்பதே.)

அந்த ஆற்றல் புலம் அறிவியலாளர்களால் ‘ஹிக்ஸ் புலம்‘ (Higgs Field) என்றும், அந்த ஆற்றல் புலத்தில் இருந்துகொண்டு, பிரபஞ்சத்தில் உள்ள பொருட்கள் அனைத்துக்கும் நிறையை வழங்கும் துகள்கள் ‘ஹிக்ஸ் போசான்கள்’ (Higgs Bosons) என்றும் அழைக்கப்படுகின்றன.

நான் சொன்னதை யாருமே தீவிரமாக எடுத்துகொள்ளவில்லை, என்னுடன் யாரும் பணியாற்ற விரும்பாவில்லை என்று தனது ஆய்வுக் கட்டுரை குறித்து பிபிசி ரேடியோ 4 நிகழ்ச்சி ஒன்றில் கூறினார் பீட்டர் ஹிக்ஸ்.



1960களில் பீட்டர் ஹிக்ஸ் அனுமானமாக முன்வைத்த இந்தத் துகள்களின் இருப்பு, 2012இல் பிரான்ஸ் சுவிட்சர்லாந்து எல்லையில் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையம், பூமிக்கு அடியில் அமைத்துள்ள ‘லார்ஜ் ஹேட்ரான் கொலைடர்’ (Large Hadron Collider) எனும் உலகின் மிகப்பெரிய மற்றும் உலகிலேயே மிகவும் அதிக திறன் மிக்க துகள் முடுக்கி (Particle Accelerator) மூலம் செய்யப்பட்ட சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது.

அதுவரை கண்டுபிடிக்க முடியாத மற்றும் இயலாத ஒன்றாகவே இது கருதப்பட்டு வந்தது. இதுவே கடவுளுடன் இந்தத் துகள்கள் அடையாளப்படுத்தப்படக் காரணமானது என்பதைப் பற்றிப் பார்க்கும் முன், ‘ஹிக்ஸ் போசான்’ எனும் பெயருக்கு உள்ள இந்தியத் தொடர்பு குறித்துக் காண்போம்.


போசான் இந்திய விஞ்ஞானியின் பெயர்

இந்தப் பேரண்டத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை. அந்த அணுக்கள் புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் ஆகியவற்றால் ஆனவை.

புரோட்டான், நியூட்டரான் போன்றவற்றையும் அணுவடித் துகள்களாகப் பிரிக்க இயலும். இந்த அணுவடித் துகள்கள் அடிப்படைத் துகள்கள், கூட்டுத் துகள்கள் என இரு வகைப்படும்.

அடிப்படைத் துகள்கள் போசான்கள் (Bosons), ஃபெர்மியான்கள் (Fermions) என இரு வகைப்படும்.





குவாண்டம் புள்ளியியலின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றான போஸ் ஐன்ஸ்டைன் புள்ளியியல் கோட்பாட்டை மேம்படுத்த இந்திய விஞ்ஞானி சத்யேந்திரநாத் போஸ் ஆற்றிய பங்களிப்பைபோற்றும் வகையில் பால் அட்ரியன் டிராக் எனும் அறிவியலாளர், இந்தக் கோட்பாட்டின்படி அமைந்துள்ள அடிப்படைத் துகள்களுக்கு 'போசான்கள்' என்று பெயரிட்டார்.

ஹிக்ஸ் அனுமானித்த இந்த துகள்களும், ஒரே குவாண்டம் நிலையில் இயங்கும் பல துகள்கள் இருக்கும்படியான போஸ் ஐன்ஸ்டைன் புள்ளியியல் கோட்பாட்டின்படி அமைந்துள்ளது என்பதால் இதற்கு 'ஹிக்ஸ் போசான்' என்று பெயர் வந்தது.

'கடவுள் துகள்கள்' என்று பெயர் வந்தது எப்படி?: 1982ஆம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்ற லியோன் மேக்ஸ் லேடர்மேன், எழுத்தாளர் டிக் தெரேசி உடன் இணைந்து எழுதிய நூல் 'The God Particle: If the Universe Is the Answer, What Is the Question?' என்பது.

1993இல் வெளியான இந்த நூலின் தலைப்பில் The Goddamn Particle என்று எழுதியிருந்தனர்.

'goddamn' எனும் ஆங்கில வார்த்தை சலிப்பு அல்லது வெறுப்பால் உண்டாகும் கோபத்தை வெளிப்படுத்த பயன்படுத்தப்படுவது.

ஆய்வாளர்கள் கண்ணில் சிக்காமல் நழுவிக்கொண்டே போகும் அந்த 'போசான்' துகள்களை விளக்கும் வகையிலான அந்தத் தலைப்பை நூலின் பதிப்பாளர் விரும்பவில்லை.

இதன்காரணமாக இதன் பெயரை 'The God Particle' என்று மாற்றியதாக லியோன் மேக்ஸ் லேடர்மேன் மற்றும் டிக் தெரேசி அப்புத்தகத்திலேயே குறிப்பிட்டுள்ளனர்.

'ஹிக்ஸ் போசான்' துகள் இருப்பதாக ஓர் அனுமானம் முன்வைக்கப்பட்டு, பல ஆண்டுகளாக நடத்தப்பட்ட, பல்வேறு ஆய்வு களிலும் இதன் இருப்பு உறுதிசெய்யப்படாமல் இருந்தது. அதனால் உண்டான சலிப்பையே அவர்கள் 'goddamn' என்று எழுதியுள்ளனர்.

அதுவே 'கடவுள் துகள்கள்' என்று தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடவுள்தான் இந்த உலகைப் படைத்தார் என்று மதங்கள் நம்புவதால், உலகில் உள்ள பொருட்கள் அனைத்துக்கும் நிறையைக் கொடுக்கும் இந்த துகளுக்கு 'கடவுள் துகள்' என்று ஒரு சாராரால் அழைப்புப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், அப்போது அறியப்படாத அந்தத் துகள்களை கடவுளாக சித்தரிப்பதையோ, குறிப்பதையோ பல மதகுருக்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

இது அலுவல்பூர்வமான பெயர் அல்ல என்பதால் அறிவியல் ஆய்வாளர்கள் அவ்வாறு அதை அழைப்பதில்லை, என்று பல நாடுகளைச் சேர்ந்த பல்வேறு ஆய்வாளர்களும் தங்கள் பேட்டிகளிலும் உரைகளிலும், 'ஹிக்ஸ் போசான்' துகள்களை 'கடவுள் துகள்கள்' என்று அழைப்பது சரியானதல்ல என்று தெளிவு படுத்தியுள்ளனர்.

- M. தரணி







# நடமாடும் அம்மா உணவகம்

# முதல்வர் துவக்கி வைத்தார்

நடமாடும் அம்மா உணவக வாகனங்களை தமிழக முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 200 வார்டுகளில் ஏற்கனவே 407 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திடத்தை விரிவுபடுத்தி, 27 லட்சன் ரூபாய் மதிப்பில் மூன்று நடமாடும் அம்மா உணவக வாகனங்கள் இன்று முதல் சென்னை மாநகராட்சியில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. முதல்வர் இத்திட்டத்தை தொடங்கி வைத்து உணவு வழங்கினார்.

அம்மா உணவகத்தில் வழங்கப்பட்டு வரும் உணவு வகைகள் இந்த நடமாடும் அம்மா உணவகத்தில் கிடைக்கும். அதேபோல், விலைப்பட்டியலிலும் எந்த மாற்றமும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வடசென்னை, மத்திய சென்னை, தென் சென்னை என மூன்று மண்டலங்களில் நடமாடும் அம்மா உணவகங்கள் இயங்கும் என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.




முதற்கட்டமாக இந்த மூன்று நடமாடும் அம்மா உணவக வாகனங்கள் துவக்கி வைக்கப்பட்டாலும், நாளடைவில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் நடமாடும் அம்மா உணவகங்களை செயல்படுத்த சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

தொழில் நிறுவனங்கள், கட்டுமான பணியிடங்கள், பேருந்து நிலையம் என பொதுமக்கள் அதிகம் கூடக்கூடிய இடங்களில் இந்த நடமாடும் வாகனங்கள் செயல்பட உள்ளது. நடமாடும் அம்மா உணவக வாகனத்தில் குடிநீர், கைகழுவும் வசதி உள்ளிட்டவையும் செய்யப்பட்டுள்ளது.

- E. தாமோதரன்

# ‘அன்பு’ என்றும் மாறாதது!

கண்களால் பல பேரை
பார்க்க முடிகின்றது.
ஆனால் இதயத்தால்
உன்னை போன்ற சில
அன்பான உறவுகளை
மட்டுமே பார்க்க
முடிகின்றது.

இன்பத்திலும் சரி
துன்பத்திலும் சரி
உன் அன்பை தேடி
என் மனம் தவிக்கும்.

இதயம் துடிப்பது
நின்றால் மட்டும்
மரணம் அல்ல சில
அன்பான இதயங்களின்
பேச்சு நின்றால் கூட
மரணம் தான்.

என் மீது அன்பு
வைப்பதற்கு உன்னை
மிஞ்ச யாரும் இல்லை
அதனால் தான்
என்னவோ என்
இதயம் உன்னை
மட்டும் நேசிக்கிறதோஞ்?

முகம் பார்க்கமாலும்
குரல் கேக்காமலும்
தொலைவில்
இருந்தாலும் என்
அன்புக்கு
உரிமையான உறவு
நீ மட்டும் தான்.

என் மூச்சோடு
கலந்து விட்ட
உன் காதலின்
சுவாசமும் என்னோடு
கலந்து விட்ட
உனது அன்பின்
நேசமும் மரணம்
வரை தொடரும்.

ஆழமான காதலும்
உண்மையான
அன்பும் உயிரை
விட புனிதமானது.
உயிர் பிரிந்தாலும்
உண்மையான
அன்பையும் ஆழமான
காதலையும்
பிரிக்க முடியாது.

உண்மையான
அன்பிற்கு
ஏமாற்ற தெரியாது.
அதற்கு ஏமாற
மட்டுமே தெரியும்.

ஒருவரை இழக்கும்
போது வரும்
கண்ணீரை விட
அவர்களின் அன்பை
இழக்க கூடாது என்று
நினைக்கும் போது
வரும் கண்ணீருக்கு
தான் வலி அதிகம்.
ஒரு பெண்ணோ
ஒரு ஆணோ
திமிராக இருப்பதற்கு
அவர்களின் ஒழுக்கமும்,
நேர்மையும்,
உண்மையான அன்பான
குணங்களுமே காரணம்.

யாருடன் வாழ
முடியுமோ அவர்களை
நேசிப்பதை விட,
யாருடைய அன்பு
இல்லாமல் வாழ
முடியாதோ அவர்களை
நேசியுங்கள் வாழ்கை
சிறப்பாக இருக்கும்.

என் மனம் உன்
அன்பான நினைவுகளை
சுமக்கும் கல்லறை அல்ல.
உன் அன்பான
நினைவுகளை சுமக்கும்
கருவறை.

உருவமற்ற அன்பு
எனும் பொக்கிஷத்திற்காக
மனம் ஏங்கும் ஏக்கம்
தான் இந்த காதல்.

உன் உறவாக மாற
எனக்கு ஆசை இல்லை.
உன் உயிரோடு உயிராக
கலந்து உறவாட ஆசை.

நீ பேசும் வார்த்தையின்
அர்த்தம் எல்லோருக்கும்
புரியும் உன் மௌனத்தின்
அர்த்தம் உன் மீது அன்பு
கொண்டவர்களுக்கும்
உன்னை புரிந்து
வைத்திருப்பவர்களுக்கும்
தான் புரியும்.

- கவிஞர் நிவேதிதா




# கொண்டாடப்படவேண்டிய நாள்...

இன்றைய தமிழ்நாடு அமைந்து 2020, நவம்பர் 1ம் தேதி அன்று 64ஆண்டுகள் நிறைவு பெற்றது. சென்னை இராஜதானி என்று அழைக்கப்பட்ட ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகள் இணைந்த மாநிலமாக இருந்ததை 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மொழிவாரியாக சென்னை மாகாணம் என்று பிரிந்த பின்பு அறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு என்று பெயரிடப்பட்டது. தமிழர்க்கு சொந்தமான பல பகுதிகள் வேறு மாநிலங்களுக்குச் சென்றுவிட்டன. இந்த ஆண்டு கடந்த காலத்தில் சென்னை மாகாணம் என்று அழைக்கப்பட்ட தமிழகத்திற்கு பொன்விழா ஆண்டு ஆகும். கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் தோன்றிய நாளையொட்டி ஆண்டுதோறும் அந்த மாநில அரசுகள் விழாக்கள் நடத்தி வருகின்றன. ஆனால், தமிழகத்தில் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறுவது இல்லை.

‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்உலகம்‘ என்று தொல்காப்பியம் தமிழகத்தின் எல்லைகளை வரையறுத்து கூறுகிறது. ஆங்கிலேயரின் தவறான நிர்வாகத்தால் ஒவ்வொரு தேசிய இனம் மற்றும் மொழிவாரியாக மாநிலங்கள் அமையாமல் இருந்த நிலை ஏற்பட்டுவிட்டது. ஆங்கிலேயர் வங்கத்தை சூழ்ச்சியால் இரண்டாகப் பிரித்தனர். அன்றைக்கு காங்கிரஸ் கடுமையாக இச்சூழ்நிலையை எதிர்த்தது. இந்நிலையில், அய்க்கிய தமிழகம், விசாலா ஆந்திரம், நவக் கேரளம், அகண்ட கர்நாடகம், சம்யுக்த மகாராஷ்டிரம், மகா குஜராத் என மொழிவாரியான மாநிலக் கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. தெலுங்கு பேசும் மக்களுக்கு தனி மாநிலம் கோரி 1952இல் அக்டோபர் 13ஆம் நாள் பொட்டி ஸ்ரீராமுலு தொடங்கிய 65 நாள் உண்ணாவிரதம் டிசம்பர் 15இல் அவருடைய மரணத்தில் முடிந்தது. இப்போராட்டம் ஆந்திரத்தில் பெரும் புயலைக் கிளப்பி, 16 பேர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதன் விளைவாக கர்நூலை தலைமையகமாகக் கொண்டு ஆந்திரம் தனி மாநிலமாக ஆக்கப்பட்டது. இருப்பினும் ஆந்திரர்கள் தமிழகத்திற்குச் சொந்தமான வேங்கடமலையையும் தன் வசப்படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல் மெட்ராஸ் மனதே என்ற கோஷம் வைத்து அர்த்தமற்ற முறையில் போராடினார்கள்.

சென்னை மாகாணம், தமிழகம் உருவாகியதற்கு பலரின் தியாகங்கள் அளப்பரியவை. தமிழகத்தின் வட எல்லையான திருத்தணியும், திருப்பதியும் தமிழகத்திற்குப் பெற சிலம்புச் செல்வர் ம.பொ.சி.யின் போராட்டங்கள் இன்றைக்கும் வரலாற்றில் உள்ளன. வடக்கு எல்லைப் போராட்டத்தில் ம.பொ.சி. அவர்கள், கொ.மோ.ஜனார்த்தனம், சோமா. சுவாமிநாதன், ஆ.தாமோதரன், கிருஷ்ணமூர்த்தி, அ.லூயிஸ், மு.வேணுகோபால், தங்கவேலு, ஆறுமுகம், ஜி.சுப்பிரமணியம் ஆகியோருடன் திருப்பதி மீது படையெடுப்பு என்ற போராட்டத்தையும் பிரச்சார பணியையும் மேற்கொண்டார்.

மங்களம் கிழார் என்பவரின் அழைப்பை ஏற்று வட எல்லைப் பகுதிக்கு புகை வண்டி மூலமாக திருப்பதி வரை செல்ல பயணப்பட்டார். ம.பொ.சி. திருப்பதி நுழைவைத் தடுக்க பலர் முனைந்தும் கீழ் திருப்பதியில் உள்ள குளக்கரை கூட்டத்தில் ம.பொ.சி. பேசும்பொழுது திட்டமிட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டு, மரங்களில் இருந்து கிளைகளை முறித்து வீசினர். அதைப் பொருட்படுத்தாமல் வேங்கடத்தை விட மாட்டோம் என்று ஒரு மணி நேரம் கர்ஜித்தார். ம.பொ.சி. நடத்திய மொழிவாரி மாநிலப் பிரச்சினை வேகமடைந்து வெற்றிக் கொடியை நாட்டியது. ஆனால், திருப்பதி, சித்தூர், திருக்காளத்தி, திருத்தணி, பல்லவநேரி, கங்குந்திகுப்பம் போன்ற பகுதிகள் நியாயமாக தமிழகத்தோடு சேர்க்க வேண்டும் என்று ஆவணங்களோடு மத்திய அரசுக்குத் தெரியப்படுத்தினார். 09.04.1953இல் 24.4.1953 வரை கடை அடைப்பும் பொது வேலை நிறுத்தமும் தொடர்ந்து 15 நாள்கள் (மறியல், போராட்டம்) நடைபெற்றது. புத்தூர் கலவரத்தில் ம.பொ.சி.யை தாக்க சதிகளும் தீட்டப்பட்டன. அந்தக் கலவரத்தில் நெல்லையைச் சேர்ந்த ஒருவர் ம.பொ.சி.யைக் காப்பாற்றியதாகவும் இவரை நெல்லை தமிழன் என்று ம.பொ.சி. போராட்ட வரலாற்றில் குறிப்பிடப்பட்டு உள்ளது. 1953ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் தேதி எல்லை தடையை மீறி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு 6 மாத சிறைத் தண்டனை ம.பொ.சி. பெற்றார். திருத்தணி எல்லைப் போராட்டத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி தலைமையில் நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக தமிழக ஆந்திர முதல்வர்கள் காமராஜரும், சஞ்சீவரெட்டியும் பேசி வடவேங்கடம் போன்று திருத்தணியும் ஆந்திரர்களின் ஆளுமைக்குச் செல்லாமல் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. ஒரு காலத்தில் வடஆர்க்காடு மாவட்டத்தில் இருந்த சித்தூர், திருப்பதி ஆகியவற்றை ஆந்திரர் எடுத்துக் கொண்டனர். இப்பிரச்சினை குறித்து திரும்பவும் திருப்பதியில் காமராஜரும், சஞ் சீவரெட்டியும் பேசியதன் விளைவாக தமிழக ஆந்திர சட்டமன்றங்களில் ஒரே நாளில் இதுகுறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ம.பொ.சி. அவர்கள் திருத்தணி எல்லைப் போராட்டம் மட்டுமல்லாமல் நாஞ்சில் நாடான கன்னியாகுமரி மாவட்டத்தையும், செங்கோட்டை, கூடலூர், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை தமிழகத்தில் இணைக்க வேண்டும் என்ற போராட்டங்களுக்கும் துணை நின்றார். கன்னியாகுமரி, செங்கோட்டை தமிழகத்துடன் இணைக்கும் போராட்டத்தை வழி நடத்தியவர் பி.எஸ்.மணி ஆவார். சாம் நதானியெல், நேசமணி போன்ற போர்குணம் கொண்டோரின் தலைமையில் இக்கோரிக்கை பிறப்பெடுத்தது. பி.எஸ்.மணி அழைப்பு இருந்தாலும், அழைப்பு இல்லை என்றாலும் தமிழகத்தில் நடக்கும் அனைத்து மாநாட்டுக்கும் சென்று குமரியை தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்ற தீர்மானங்களை முன்மொழிய வேண்டிக் கொள்வது அவரது சலியாத நடவடிக்கை ஆகும். பலர் மணியினுடைய கோரிக்கையை காதில் போடாமல் அவரை தவிர்த்தபொழுதும் கூட சற்றும் கவலைப்படாமல் தொடர்ந்து போராடினார். மணிக்கு ம.பொ.சி. அவர்களுடைய ஆதரவு கிடைக்கப்பெற்றது. 1954இல் ஜூனில் நேசமணி தலைமை ஏற்று குமரியில் போராட்டங்களை நடத்தினார். சிறை சென்றார். ம.பொ.சி. அச்சமயத்தில் மூணாறு சென்று பிரச்சாரத்தை மேற்கொண்டார். நேசமணி கைதைக் கண்டித்து ம.பொ.சி. குரல் கொடுத்தார்.

அச்சமயத்தில் திருவிதாங்கூரில் கல்குளத்தில் நேசமணி கைதைக் கண்டித்து மக்கள் பேரணி நடத்தினர். 1948ஆம் ஆண்டு ராஜஸ்தானுக்கும் குஜராத்துக்கும் ஏற்பட்ட எல்லை சிக்கலில் சிரோதி பகுதியை குஜராத்துக்கு அன்றைய துணைப் பிரதமர் மற்றும் உள்துறை

அமைச்சராக இருந்த சர்தார் படேல் மாற்றம் செய்ததை தினமணி கார்ட்டூன் படமாக வெளியிட்டது. அந்தக் கார்ட்டூனை 1000 தாள்களில் அச்சிட்டு ஏன் திருவிதாங்கூரை தமிழகத்தில் சேர்க்கக் கூடாது என்று நியாயம் கேட்டார் மணி. 1950இல் கன்னியாகுமரி எல்லைப் போராட்டம் மிகவும் வேகம் அடைந்தது. இதுகுறித்து கொச்சி முதல்அமைச்சரும் அன்றைய தமிழக அமைச்சர் பக்தவத்சலமும் பாளையங்கோட்டையில் சந்தித்துப் பேசினர். ஆனால், அதில் எடுக்கப்பட்ட முடிவுகளை மணி ஏற்றுக் கொள்ளாமல் கேரளத்துடன் குமரி மக்கள் இருக்க முடியாது என்பதையும் எந்த சமசர திட்டத்திற்கும் தயார் இல்லை எனத் தெரிவித்தார். குஞ்சன் நாடார் போன்ற பல்வேறு போராட்ட தளபதிகள் இப்பிரச்சினையில் அணிவகுத்தனர். அரசு அலுவலகங்கள் முன்னால் மறியல், பொதுக் கூட்டங்கள், மறியல்கள் போன்றவை நித்தமும் குமரி மாவட்டத்தில் நடைபெற்றன. 1954 ஆகஸ்ட் 11 அன்று 16 தமிழர்கள் போலீசாரால் சுடப்பட்டு மாண்டனர். நேசமணியின் தொடர் போராட்டம் நிறுத்தப்பட்ட பின்பும் குஞ்சன் நாடார் போன்ற தளபதிகள் போலீசாரின் குண்டர் தடியால் அடித்து உதைக்கப்பட்டனர்.

அச்சமயம் தலைமறைவாக இருந்த போராட்டத்தை நடத்தி வந்த மணியை திருநெல்வேலி மாவட்டத்தில் கேரள போலீசார் கைது செய்து திருவனந்தபுரம் சிறையில் வைத்தனர். இதுபோன்று செங்கோட்டையிலும் போராட்டங்கள் நடத்தி கரையாளர் கைது செய்யப்பட்டு திருவனந்தபுரம் சிறையில் வைக்கப்பட்டார். இறுதியாக காமராஜரும் திருவிதாங்கூர் கொச்சி உள்ளடக்கிய கேரள முதல்அமைச்சர் மனம்பள்ளி கோவிந்தமேனன் ஆகியோர் பேசியபின் தேவிக்குளம் பீர்மேடு பகுதிகளை கேரளம் எடுத்துக்கொண்டது. தேவிகுளம் பீர்மேடு கேரளத்திற்கு சென்றதற்கு தமிழகத்தில் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. கன்னியாகுமரி செங்கோட்டை தமிழகத்தில் இணைந்தது. இருப்பினும் கேரளம் பெரியாறு அணையை கையகப்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் இருந்தபொழுது காமராஜர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. மாநில புனரமைப்புக் குழு பசலிக் கமிஷன் உறுப்பினராக இருந்த பணிக்கரால் தேவிகுளம் பீர்மேடு தமிழகத்தை விட்டுப் போய்விட்டது என்ற குற்றச்சாட்டும் அப்பொழுது எழுந்தது.

நாகர்கோவில் கன்னியாகுமரி மாவட்ட இணைப்பு விழாவில் 1956 நவம்பர் 1ஆம் தேதி காமராசர் கலந்து கொண்டார். அதே நாளில் செங்கோட்டை இணைப்பு விழாவிற்கு செங்கோட்டையில் சி.சுப்பிரமணியன் பங்கேற்றார். நாகர்கோவிலில் நடந்த விழாவிற்கு தியாகி பி.எஸ்.மணி அவர்களை அழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. அதைப் பொருட்படுத்தாமல் மணி இரண்டு நாள் கழித்து நாகர்கோவிலில் ம.பொ.சி., என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோரைக் கொண்டு குமரி மாவட்டம் இணைப்பு விழாவை சிறப்பாக நடத்தினார். மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியிலும் சிலர் ஆதரவாக இருந்தனர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, பொது உடைமைக் கட்சியைச் சார்ந்த ஜீவா போன்ற தலைவர்களும் மொழிவாரியாக தமிழகம் அமைய வேண்டும் என்ற கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று தியாகி சுந்தரலிங்கனார் 77 நாள்கள் உண்ணாநோன்பு இருந்து தன்னுடைய உயிரையே அர்ப்பணித்தார்.

தனது கோரிக்கையை கம்யூனிஸ்ட் தலைவரான ஐ.மாயாண்டி பாரதிக்கு கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தினார். தமிழ்நாடு என்ற பெயர் சூட்டவேண்டும் என்ற கோரிக்கையை அண்ணா முதல்வராகி நிறைவேற்றினார். தமிழ்நாடு என்ற பெயரிடக் கோரி நாடாளுமன்ற மக்கள் அவையில் பேரறிஞர் அண்ணாவின் கோரிக்கையை ஆதரித்து பூபேஷ் குப்தா குரல் கொடுத்தார். தட்சணப்பிரதேசம் என்று தக்கண பீடபூமி மாநிலங்கள் ஒன்றிணைக்க பண்டித நேரு நடவடிக்கைகள் எடுத்தபொழுது முதல் கண்டனக் குரல் அன்றைய முதல் காமராஜரிடம் இருந்து எழுந்தது. மொழிவாரியாக மாநிலங்கள் அமைய வேண்டும் என்று காமராஜர் விரும்பினார். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் குரல் காமராஜரின் எதிர்ப்புக்கு வலு சேர்த்தது. தமிழகத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் இடையே உள்ள எல்லை 830 கி.மீ. ஆகும். கோவை மாவட்டம் முதுமலை தொடங்கி தெற்கே நெய்யாற்றங்கரை கொல்லங்கோடு வரை நீண்டுள்ளது. தமிழக கேரள மாநிலங்கள்

எல்லை தூரம் 203 கி.மீ. அளவில்தான் இதுவரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 627 கி.மீ. தூரம் எல்லைகள் நிர்ணயிக்கப்படாமலே இருக்கின்றது.

இதற்கு கேரளா அரசு ஒத்துழைப்புத் தரவில்லை. இதனால் தமிழகத்தில் இருந்தாலும் தமிழகப் பயணிகள் சித்ரா பௌர்ணமியில் கண்ணகியை வணங்கச் செல்லும்போது கேரள காவல் துறையினரால் அத்துமீறி தாக்கப்படுகின்றனர். அண்டை மாநிலங்களோடு நதிநீர்ப் பிரச்சினையிலும், சமீபத்தில் கர்நாடகத்தோடு ஒக்கனேக்கல் பிரச்சினையில் தமிழகத்தின் நியாயங்களை வெளிப்படுத்தினாலும் கர்நாடகத்தின் எல்லை அத்துமீறல் தொடர்ந்தவண்ணம் உள்ளது. கடந்த காலங்களில் தமிழர் இழந்த நிலங்கள் ஆந்திரத்திலும், கேரளத்திலும், கர்நாடகாவிலும் உள்ளன. தமிழகத்தில் உள்ள தாளவாடி கர்நாடகத்தில் சேர்க்க வாட்டள் நாகராஜ் தேவையற்ற போராட்டங்களை நடத்தி வருகிறார். ஏற்கனவே கொள்ளேகால், பெங்களூர், கோலார் ஆகிய பகுதிகளை கர்நாடகத்திடம் இழந்து உள்ளோம். 1956இல் தமிழகத்தின் விருப்பத்திற்கு மாறாக நெய்யாற்றங்கரை, நெடுமாங்கரை, தேவிகுளம் பீர்மேடு கேரளத்தில் முறைகேடாக சேர்த்துவிட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையின் தெற்கேயிருந்து தமிழகத்தோடு இணைந்தது. நெய்யாற்றங்கரை, நெடுமாங்காடு இழந்ததால் இன்றைக்கு காமராஜர் ஆட்சியில் நாம் கட்டிய நெய்யாறு அணையை கேரளா மூடிவிட்டது. தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை இழந்ததால் முல்லைப் பெரியாறில் கேரளா முரண்டு பிடிக்கின்றது. அது மட்டுமல்லாமல் நெல்லை மாவட்டத்தின் அடவி நயனாறு, உள்ளாறு, செண்பகவல்லி, விருதுநகர் மாவட்டம் அழகர் அணை திட்டம், பாலக்காடு பகுதிகளை இழந்ததால் கொங்கு மண்டலத்தில் சிறுவாணி, பம்பாறு,பாண்டியாறுபுன்னம்புழா,பரம்பிக்குளம் ஆழியாறு பிரச்சினைகள் இன்றைக்கும் கேரளாவோடு தலைதூக்கி நிற்கின்றது.

கர்நாடகத்தோடு கொள்ளேகால், மாண்டியா, கோலாறு இழந்ததால் காவிரி, தென்பெண்ணை, ஒகேனக்கல் பிரச்சினை, ஆந்திரத்தில் சித்தூர், நெல்லூர், திருப்பதி இழந்ததால் பாலாறு, பொன்னியாறு, பழவேற்காடு ஏரி பிரச்சினை. கணேசபுரத்தில் தடுப்பணை கட்டப்படுகிறது. இவ்வளவு நதிநீர் ஆதாரங்களும், இயற்கை ஆதாரங்களும் நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது. இதெல்லாம் நாம் இழந்த மண்ணால். இந்தத் தருணம் கொண்டாட்டமா? சிந்திக்கவா? என்று தெரியவில்லை. ஆனால் தென் மாவட்டங்களில் தமிழகத்தின் கலாச்சார பண்டைய தலைநகரம் ஏதென்ஸ், ரோம் நகர்களைப் போன்ற மதுரையைத் தலைநகராகக் கொண்டு தென் தமிழகம் ஏன் அமையக்கூடாது என்ற கோரிக்கையும் எழுந்து வருகின்றது. தமிழகத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், இன்னொரு மாநிலம் அமைந்தால் பல சலுகைகளும், கிடைக்கும் என்று சிலர் வலியுறுத்துகின்றனர்.

மத்திய அரசின் பகுதியான புதுச்சேரிக்கே சிறப்புச் சலுகை இருக்கும்போது, தமிழ் பேசும் இன்னொரு மாநிலம் அமைந்தால் சில உரிமைகள் கிடைக்கும் என்று வாதிடுகின்றனர். இந்த வகையில் தென் தமிழகம் அமைய வேண்டும் என்ற கோரிக்கையும் விவாதத்துக்கு உரிய பொருளாகும். தென் தமிழகம் அமைந்தால் நிர்வாகம், மக்கள் நலப் பணிகள் என பல நன்மைகளும் உள்ளன. காலப் போக்கில் அரங்கன் பள்ளிகொண்ட காவிரியின் தென்கரை திருவரங்கரத்திலிருந்து குமரி முனையில் ஐயன் வள்ளுவன் சிலை வரை தென் தமிழகம் அமைய வேண்டும் என்ற சிலரின் விருப்பங்கள் நிறைவேற வேண்டும் என்று நீர்பூத்த நெருப்பாக உள்ளன. 1998லிருந்து மத்திய அரசு சிறு மாநிலங்கள் அமைய வேண்டும் என்று வாஜ் பாய் பிரதமராக இருந்தபோது திட்டங்கள் தீட்டப்பட்டது. உள்துறை அமைச்சர் அதற்கான முழு முயற்சிகளை மேற்கொண்டு உத்தராஞ்சல், ஜார்கண்ட், சட்டீஸ்கர் வரை பல மாநிலங்கள் அமைந்தன. தற்போது தெலுங்கானாவும் தனி மாநிலமாகிவிட்டது.

ஒரே மொழி பேசும் மாநிலத்தை நிர்வாக ரீதியாக பிரிக்கலாம் என்று மத்திய அரசும் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டுள்ளது. தியாகங்கள் செய்து மீட்டுத் தந்த தணிகை, குமரி, செங்கோட்டை ஆகிய பகுதிகளோடு தமிழகத்தோடு இணைக்க போராடிய தியாகச் செம்மல்களின் கீர்த்தியை நினைவில் கொள்வோம். நாம் இழந்த மண்ணை எப்படி மீட்பது என்பதும் இப்போது சிந்திக்கப்படவேண்டிய விடயமாகும். இவ்வாறு கே.எஸ். ராதாகிருஷ்ணன் பதிவு செய்துள்ளார்.

- A. முருகையன்

# வள்ளலார் அருளிய

# காயகல்பம்

**Dr. K. ராஜமாணிக்கம்**



**கற்பூரவல்லி:** வேறுபெயர்கள் ஓமவல்லி, ஓதப்பன்னா, பாசானபேதி, கண்டிரி போரேஜ்.

பசுமையான இந்த தாவரம் நல்ல கனமான, வட்டவடிவான வாசனைமிகுந்த அழகிய இலைகளை உடையது. இலை ஓரங்கள் கத்தரித்துபோல் அழகாய் இருக்கும். பூக்கள் சிறியதாக இருக்கும். தண்டுகளை நட்டு இந்த செடியை வளர்க்கலாம். தமிழ் முனிவர் அகத்தியரால் கற்பூரவல்லியின் பயன்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. சளி, கபத்திற்கு அருமருந்தான இந்த மூலிகையை பற்றி அகத்தியர் கற்பாறை யத்து நெஞ்சில் கட்டு கபம் வாதம் போம் என்று பாடியிருக்கிறார்.

கற்பூரவள்ளி (Coleus aromaticus) ஒரு மருத்துவ மூலிகைச் செடியாகும். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படும் இது, புதராக வளருகிறது. வாசனை மிக்கதான இச்செடியின் தண்டு முள்போல நீண்ட மயிர்த் தூவிகளைக் கொண்டிருக்கும். இதன் இலைகள் தடிப்பாகவும் மெதுமெதுப்பாகவும் இருக்கும். கசப்புச் சுவையும் காரத்தன்மையும் வாசனையும் இதன் இலை மருத்துவ குணம் கொண்டதாகும். இது வீடுகளில் பரவலாக வளர்க்கப்படுகிறது.

இந்தியாவின் அனைத்துப்பகுதிகளிலும் இத்தகைய மூலிகைச் செடி நன்றாக வளரும். இதை வீட்டில் உள்ள சிறிய தோட்டத்தில் கூட வளர்த்து உடனடி நிவாரணத்திற்குப் பயன்படுத்துகின்றனர். இதற்கு நல்ல வடிகால் வசதியுள்ள குறு மண் மற்றும் வண்டல் மண்,செம்மண், களிகலந்த மணற்ப்பாங்கான இரு மண் பாட்டு நிலம் ஏற்றது. 6.5 7.5 வரையிலான கார / அமிலத்தன்மை ஏற்றது. தட்ப வெப்பம் குறைந்தது 25* செல்சியஸ் முதல்35* செல்சியஸ் இருக்க வேண்டும். இனப்பெருக்கம் செய்ய 4 இலைகளுடன் கூடிய சுமார் 4 அங்குலம்நீளம் கொண்ட தண்டுகளை நட்டு நீர் பாச்சினால்ஒரு மாதத்தில் நாற்று வளர்ந்து விடும். 6 மாதத்தில் பூக் காம்புகள் உருவாகும் போதே அதனை அகற்றிவிடவேண்டும். சுமார் 8 மாதத்தில் இலைகள் முதிர்வடைகின்றன. அப்போதுதான் 'மென்தால்' சதவிகிதம்அதிகமாக்க காணப்படும்.

பயன்தரும் பாகங்கள் தண்டு, இலைகள் ஆகியவை. கற்பூரவல்லி தாவரத்தின் பாகங்கள்இருமல், சளி, ஜலதோஷம் போன்ற நோய்களுக்குமுக்கிய மருந்து. வியர்வை பெருக்கியாகவும், கோழையகற்றிக் காச்சல் தணிக்கும் மருந்தாகும். இலைச் சாற்றை சர்கரை கலந்து குழந்தைகளுக்குக்கொடுக்க சீதள இருமல் தீரும்.

இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை இவற்றை நன்குகலக்கி நெற்றியில் பற்றுப் போடத் தலைவலி நீங்கும்.சூட்டைத் தணிக்கும். இலை, காம்புகளைக் குடிநீராக்கிக் கொடுக்க இருமல்,சளிக் காச்சல் போகும்.

இதன் இலைகளை எடுத்து கழுவி சாறெடுத்து இரண்டு மி.லி சாருடன் எட்டு மி.லி தேனுடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் மார்பு சளி கட்டுக்குள் வரும். இந்த மூலிகை குழந்தைகளின் அஜீரண வாந்தியை நிறுத்தக் கூடிய மருத்துவ குணத்தைப் பெற்றிருக்கிறது. கட்டிகளுக்கு இந்த இலையை அரைத்துக் கட்ட



கட்டிகள் கரையும். தசைகள் சுருங்குவதைத் தடுக்கும். வயிறு சம்பந்தப்பட்ட நோய், இளைப்பு நோய்களுக்கு உள் மருந்தாகவும், கண் அழற்சிக்கும் இதன் சாறு மேல் பூச்சாக தடவ குணம் தரும். மருத்துவ துறையில் இது நரம்புகளுக்குச் சத்து மருந்தாகிறது. மனக் கோளாறுகளைச் சரிசெய்யும்.

சிறுநீரை எளிதில் வெளிக் கொணரவும் பரிந்துரைக்கப்படுகிறது. இரத்தத்தை சுத்தப்படுத்தும் தாவரமாகவும் கருதப்படுகிறது.

குழந்தைகளின் சளியை கட்டுப்படுத்த: குழந்தைக்கு குடிப்பதற்காக கொதிக்க வைக்கும் நீரில், சுத்தமாக அலசி வைத்திருக்கும் 4 அல்லது 5 கற்பூரவல்லி இலைகளைப் போட்டு சிறிது நேரம் கழித்து எடுத்துவிடுங்கள்.

இலையின் சாறு முழுமையாக நீரில் இறங்கி தண்ணீர் லேசாக பச்சை நிறத்தை அடைந்து இருக்கும். அந்த நீரை மட்டும் குழந்தை பருகுவதற்குக் கொடுங்கள். 2 அல்லது 3 நாட்களுக்கு இதுபோன்ற நீரையே கொடுத்து வாருங்கள். குழந்தைக்கு சளியின் தீவிரம் கட்டுப்படும்.

வீட்டு வைத்தியத்தில் ஜலதோஷம், இருமல் நீங்க, இரண்டு கற்பூரவல்லி இலைகளை கழுவி, நசுக்கி சாறு பிழிந்து 1/2 தேக்கரண்டி தேனுடன் உண்டால் நிவாரணம் கிடைக்கும். ஒரு இலையை பறித்து கழுவி உணவு உண்பதற்கு முன் கடித்து மென்று சாப்பிட்டால் உணவு ஜீரணம் நன்றாக ஆகும்.

ஆயுர்வேதத்தில் உபயோகங்கள்: இலைகள் பரவலாக, அஜீரணம், ஜலதோஷம், கபம், சளி இவற்றை நீக்க குழந்தைகளுக்கும் உபயோகப்படுத்தப்படுகிறது. தொன்றுதொட்டு கற்பூரவல்லி இலைகள் உணவு ஜீரணக்கவும், கபம், சளி ஜுரம் குறையவும், பசி பெருகவும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. சிறுநீரக நோய்கள், சிறுநீரக கற்கள் ஆஸ்துமா இவற்றுக்கும் நல்ல மருந்து.

சிறு பூச்சிக்கடிகள், ஒவ்வாமையால் தோலில் உண்டாகும் தடிப்புகள், எரிச்சல் இவற்றுக்கு இலைச்சாறு தடவப்படுகிறது. மேற்கண்டவற்றுக்கு மட்டுமில்லாமல் உணவிலும் கற்பூரவல்லியை, தென் அமெரிக்க தேசங்கள், ஜாவா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய தேசங்களில் பயன்படுத்துகிறார்கள்.

கற்பூரவல்லி இலைகளை தேங்காய், பருப்பு, மிளகாய், கொத்தமல்லி, கறிவேப்பிலை சேர்த்து சட்னியாக செய்து சாப்பிடலாம். உடலின் சளி நீங்க இலைகளை அரைத்து நீர்கலந்து கொதிக்க வைத்து ஏலக்காய், கிராம்பு (சிறிதளவு) மற்றும் ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து 3 நாட்களுக்கு தினசரி 2 வேளை பருகி வரவும்.

- தொடரும்

# தமிழகத்தில் வேல் யாத்திரை..?




திருத்தணியில் பாரதிய ஜனதா கட்சி திட்டமிட்டபடி வேல் யாத்திரையை தொடங்க முற்பட்ட நிலையில், மாநில தலைவர் எல். முருகன், ஹெச். ராஜா உள்பட அனைவரும் கைது செய்யப்பட்டனர். முன்னதாக, சென்னையில் இருந்து திருத்தணிக்கு திறந்தவெளி வேனில் முருகன், கட்சித் தொண்டர்களுடன் சென்றார். அங்கு கோயிலில் வழிபட்ட அவர் பிறகு தொண்டர்களிடையே உரையாற்றிய பிறகு யாத்திரையை தொடங்க முற்பட்டார்.

இதையடுத்து அங்கிருந்த காவல்துறையினர், எல். முருகன், எச். ராஜா, மாநில துணைத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோரை கைது செய்து பேருந்தில் அழைத்துச் சென்றனர். முன்னதாக தொண்டர்களிடையே பேசிய அவர், "நம்மை மற்றவர்கள் ஏளனமாக பேசும்போது நாம் சும்மா இருக்க முடியாது. திமுகவினர் ஆரம்ப காலம் முதல் இந்துக்களின் மத உணர்வுகளை சீண்டினார்கள். அதுதான் அவர்களின் வேலை. நம்மைத் தடுக்க திமுகவுக்கும் அவர்களுடைய கூட்டணி கட்சியினரும் யார்? அவர்களுக்கு நம்மை எதிர்க்க எந்த யோக்கியதையும் அருகதையும் கிடையாது," என்று பேசினார்.

"நாம் போற்றிப்பாடும் கந்தர் சஷ்டி கவசத்தை விமர்சிப்பவர்களின் பின்னணியில் ஒரு கயவர் கூட்டம் இருக்கிறது. அந்த கட்சியினர்தான் கருப்பர் கூட்டம் என்ற குழுவினருக்கு சட்ட உதவிகளை செய்தார்கள்."

"நம்மை மற்றவர்கள் ஏளனமாக பேசும்போது நாம் சும்மா இருக்க முடியாது. திமுகவினர் ஆரம்ப காலம் முதல் இந்துக்களின் மத உணர்வுகளை சீண்டினார்கள். அதுதான் அவர்களின் வேலை. நாம் யாரை கும்பிட்டால் அவர்களுக்கு என்ன? திமுகவுக்கும் அதன் கூட்டணி கட்சியினருக்கும் நம்மை எதிர்க்க எந்த யோக்கியதையும் அருகதையும் கிடையாது."

"நாம் போற்றிப்பாடும் கந்தர் சஷ்டி கவசத்தை விமர்சிப்பவர்களின் பின்னணியில் ஒரு கயவர் கூட்டம் இருக்கிறது. அந்த கட்சியினர்தான் கருப்பர் கூட்டம் என்ற குழுவினருக்கு சட்ட உதவிகளை செய்தார்கள்," என்று முருகன் பேசினார்.

சென்னையில் இருந்து புறப்பட திடீர் அனுமதிபாரதிய ஜனதா கட்சி அறிவித்த வேல் யாத்திரைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த



நிலையில், எல். முருகன் தலைமையிலான பாஜகவினர் திருத்தணிக்கு செல்ல காவல்துறை யினர் திடீரென்று அனுமதி வழங்கினார்கள். சென்னை எல்லையில் நாசரேத் பகுதியில் சில நிமிடங்கள் அவர்கள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்கள் மேலும் செல்ல காவல்துறையினர் அனுமதித்தனர்.

அவர்கள் செல்லும் பாதையில் காவல்துறை யினரே வழியமைத்து போக்குவரத்து சீராக இருக்க நடவடிக்கை எடுத்தனர். எனினும், திருத்தணியில் கோயிலுக்கு செல்ல ஐந்து வாகனங்களில் மட்டுமே பாஜகவினரை காவல்துறையினர் அனுமதித்தனர். தமிழ் நாட்டில் நவம்பர் 6 முதல் டிசம்பர் 6ஆம் தேதிவரை, மாநில பாஜக தலைவர் எல். முருகன் தலைமையில் வேல் யாத்திரை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்த யாத்திரைக்கு அரசு அனுமதி வழங்கவில்லை. இந்த யாத்திரைக்கு தடை கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கிலும் இந்த தகவலை தமிழக அரசு கூறியது. இருப்பினும் தடையை மீறி வேல் யாத்திரை நடத்தப்படும் என்று பாஜக தலைவர் முருகன் அறிவித்தார்.

இந்த நிலையில், சென்னையில் இருந்து யாத்திரை தொடங்க உத்தேசித்துள்ள பாஜக தலைவர் எல்.முருகன், பாஜக மூத்த தலைவர் ஹெச். ராஜா தலைமையில் நூற்றுக்கணக்கான பாஜகவினர் வெள்ளிக்கிழமை காலையில் திருத்தணி நோக்கி புறப்பட்டனர்.

கையில் வேலை ஏந்தியவாறு தொண்டர்கள் சூழ வேல் யாத்திரைக்காக பிரத்யேகமாக அலங்கரிக்கப்பட்ட வேனில் முருகன் சென்றுள்ளார். கொரோனா தொற்று காரணமாக இந்த வேல் யாத்திரைக்கு அனுமதிக்க முடியாது என்று ஏற்கெனவே அரசு உயர் நீதிமன்றத்தில் கூறியிருந்தது.

இருந்தபோதும், சமூக இடைவெளியின்றி கூட்டத்தில் செல்பவர்கள் நெருக்கமாக இருந்தபடி ஊர்வலத்தில் பாஜகவினர் சென்றனர்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய முருகன், “எம்பெருமான் தமிழ் கடவுள் முருக பெருமாளின் வழிகாட்டுதலுடன் எங்களுடைய யாத்திரையை திட்டமிட்டபடி தொடங்கி யிருக்கிறோம்“ என்று கூறினார்.

“எங்களுடைய வெற்றிவேல் யாத்திரைக்கு முருக பெருமாள் ஆசி வழங்கியிருக்கிறார். அவரை இழிவுபடுத்திய அந்த கருப்பர் கூட்டத்துக்கும் கயவர் கூட்டத்துக்கும் இந்த வெற்றி வேல் துள்ளிக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. இந்த வேல் தமிழகம் முழுவதும் உலா வரும். இந்த வேல் யாத்திரை, தமிழர்களுக்கு எதிராக, தமிழ் பண்பாட்டுக்கு எதிராக, தமிழ் கலாசாரத்துக்கு எதிராக, தமிழ் கடவுள் முருகனுக்கு எதிராக யாரெல்லாம் இருக்கிறார்களோ, அவர்களுடைய முகத்திரையை கிழிப்பதற்காக இந்த யாத்திரை புறப்பட்டிருக்கிறது,” என்று எல். முருகன் கூறினார்.

“கோடிக்கணக்கான தமிழர்களின் வீடுகளில் ஒலிக்கும் கந்தர் சஷ்டி கவசத்தை இழிபடுத்தும் வகையில் ஒரு கூட்டம் செயல்பட்டபோது அதை யாரும் பெரிதாக கவனிக்கவில்லை. ஆனால், பாரதிய ஜனதா கட்சிதான் அந்த கயவர்களை அடையாளம் காண முற்பட்டது. அதன் பிறகுதான் அதில் சிலர் மீது தேசிய பாதுகாப்பு சட்டப்படி நடவடிக்கை எடுத்தனர். ஆனால், அதன் பின்னணியில் இருப்பது யார்? அதில் பின்னணியில் இருக்கும் செந்தில் வாசன், கருப்பர் கூட்டத்துக்குப் பின்னணியில் இருந்தவர். அவர் திமுக தொழில்நுட்ப அணியில் இருந்தாரா இல்லையா? திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் ஏன் இதுவரை செந்தில்வாசன் பற்றிய விவரத்தை தமிழக மக்களிடம் வெளியிட மறுக்கிறார்?” என்று எல். முருகன் கேள்வி எழுப்பினார்.

- முனைவர் ஆ.மவுரியன்

# மன அமைதி எங்கே இருக்கிறது ?

காப்பிக்கடை நடத்தி வரும் முருகனுக்கு அன்று சனிக்கிழமை என்பதால் கடையில் வேலை அதிகம். கடையில் வாடிக்கையாளர் கூட்டம் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. முடிவதாகத் தெரியவில்லை.

காலையில் இருந்து நின்றபடியே வேலை பார்த்து வந்ததால், மாலை நேரம் நெருங்கிய போது கடுமையான தலைவலி ஏற்பட்டது.

நேரம் ஆக ஆக தலைவலி அதிகரித்துக் கொண்டிருந்தது. வலியைத் தாங்க முடியாமல்



முருகன், கடைசியில் தன் பணியாளரிடம் வியாபாரத்தை பார்த்துக் கொள்ளுமாறு ஒப்படைத்து விட்டு கடையிலிருந்து வெளியேறினார்.

எதிர்புறம் உள்ள மருந்துக்கடைக்கு சென்ற அவர், தலைவலி குணமடைய வலிநிவாரணி மாத்திரை ஒன்றை வாங்கி உட்கொண்டார். சில நிமிடங்களிலேயே தலைவலி குறைவதை உணர்ந்த அவர், மேலும் சில நிமிடங்களில் வலி முற்றிலும் நீங்கிவிடும் என்று எண்ணியவாறு அங்கிருந்து கிளம்பினார்.

கடையில் இருந்து வெளியேறும் போது, அங்கிருந்த பணிப்பெண்ணிடம், 'உங்கள் கடை மருந்தகர் கோபாலன் எங்கே? இன்று கல்லாவில் அவர் இல்லையே.' என்று கேட்டார்.

அதற்கு அப்பெண், 'சார், கோபாலன் சார் மிகுந்த தலைவலி என்று எதிரில் உள்ள உங்கள் காப்பி கடைக்கு செல்வதாகக் கூறினார். மேலும் காப்பி குடித்தால் தலைவலி நீங்கிவிடும் என்றும் கூறினார்.' என்று பதிலளித்தார்.

இதைக்கேட்ட முருகனுக்கு பேச முடியாமல் தொண்டை வறண்டது. 'ஓ... அப்படியா' என்றவாறு கிளம்பினார்.

கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது போல நம்மிடம் தீர்வை வைத்துக் கொண்டு வெளியே தேடி அலையும் அவல நிலைக்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

என்னே ஒரு விந்தை... ஆயினும் உண்மை.

மருந்தகரின் தலைவலி காப்பி அருந்துவதால் குறைகிறது. காப்பி கடை உரிமையாளருக்கோ, மாத்திரை உட்கொண்டால் தலைவலி மறைகிறது.

இவ்வாறாகவே, நம்மில் பலர் உலகின் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்து நிம்மதியைத் தேடுகிறோம்.

உண்மையான மன அமைதி நமக்குள் தான் குடிகொண்டிருக்கிறது.

- M. நிவேதிதா

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.


AYUSHMAN BHARAT
NATIONAL HEALTH PROTECTION MISSION
COVERAGE UP TO
5 LAKH RUPEES PER FAMILY PER YEAR
OVER 10 CRORE POOR & VULNERABLE FAMILIES COVERED
BENEFICIARIES OF AROUND
50 CRORE INDIANS
BIMAR NAHI RAHA LACHAAR, HO RAHA MUFT UPCHAAR
World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.
For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.
Benefits to over 10 crore poor and vulnerable families and more than 50 crore beneficiaries across the country
Annual healthcare benefits of up to Rs. 5 Lakh for every entitled family
Access to healthcare services in all government and empanelled private hospitals
Toll-Free helpline number
14555/1800111565
www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly. Posted at EGMORE RMS / 1 (Patrika Channel). **NOVEMBER - 2020**
RNI No.: **TNTAM44870/2012**. Registered No.: **TN/CC(S)DN/461/19-21**, Posted Date of Publication 15th of Every Month


# APPLE PRINTERS








*We Can Do any Printing Job*

**BROCHURES - MAGAZINE - BOOKS - BUSINESS CARDS**
**ID CARDS - CREATE LOGO - ENVELOPES - CATALOGS**
**STICKERS - GRAPHICS ELEMENTS AND ANYTHING**

# 7/13, PONMANACHEMMAL STREET,
M.G.R NAGAR, CHENNAI - 600 078.
93821 33334, 044 - 4861 5321
appleprintersam@gmail.com